ஞல விஞ்ஞானி.

மலர்-1 இதழ்-8.9.

நவம்பர் முதல் ஜனவரி 1927-28

கார்த்திகை, மார்கழி.

JL
J684 m211, N27
N27.1.8-9
159610

Registered No. M. 2260.

176.

பிரபவ ௵
மலர் 1

கார்த்திகை-மார்கழி ௴
இதழ்கள் 8 & 9

OFFICE OF THE REGI...
11 JAN
MADRAS

# ஏல விவசாயி

திருவாங்கூர் ஏல விவசாயிகள்
சங்கத்திலிருந்து வெளிவரும்
ஒரு மாதப் பத்திரிகை.

---

THE
# CARDAMOM PLANTER,
THE ORGAN
of
The Travancore Cardamom
Planters' Association.

---

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

---

## பொருள் அடக்கம்.


| தொடர் எண். | | பக்கம் எண். |
|---|---|---|
| 1 | சுதந்திரப்பாட்டு | |
| 2. | திருவாங்கூர் ஸ்ரீமூலம் பிரஜா சபை | 283 |
| 3. | பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள் | 290 |
| 4. | கூட்டுறவு வியாபாரம் | 231 |
| 5. | திருவாங்கூர் ஏல விவசாயிகளின் ஆறாவது மகாநாட்டு நடபடிக்கைகளும், தீர்மானங்களும் | 291 |
| 6. | ஒற்றுமை | 304 |
| 7. | திருவாங்கூர் மகாராணி சேது லட்சுமி பாய் | 307 |
| 8. | திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தின் ஒற்றுமை மகாநாடு | 313 |


## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| அங்கத்தினர் அல்லாதவருக்கும் சந்தா | ரூ. | 2—0—0 |
| அயல் நாடுகளுக்கு | ரூ. | 2—8—0 |

குறிப்பு:—

விஷயம் எழுதுவோர்கள் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதி அனுப்பவேண்டும். விஷயங்களுக்கு வியாசகர்களே பொறுப்பாளி.

உ

# ஏல விவசாயி.


திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து
வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.


ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?

(பாரதியார்)


ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.



| மலர் | உத்தமபாளையம், பிரபவ ௵ கார்த்திகை ௴ | இதழ் |
|---|---|---|
| 1 | 1927 ௵ நவம்பர்-டிசம்பர் ௴ | 8 |


## சுதந்திரப்பாட்டு.

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு—நாம்
எல்லோருஞ் சமமென்ப துறுதி யாச்சு
சங்கு கொண் டேவெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல் லாமெடுத் தோதுவோமே.

எல்லோரு மொன்றென்னுங் காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றுந் தொலைகின்ற காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரியரென்னும் காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சக் காரருக்கு நாசம் வந்ததே.

உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித் திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர் பாய்ச்சி மாய மாட்டோம்—வெறும்
வீணருக்கு குழைத்துடலம் ஓய மாட்டோம்.

(பாரதி)

159610
சென்னை-600 005.

# திருவாங்கூர் ஸ்ரீ மூலம் பிரஜா சபை.

மைசூர் சமஸ்தானத்திற்கு அதிகமான சீர்திருத்தங்கள் வழங்கி, அதை முன்னுக்குக் கொண்டுவந்து பிரகாசிக்கும்படி செய்த திவான்களில் கனம் V. P. மாதவராவ் அவர்களும் ஒருவர். அவர்தான் ஏலத் தோட்டத்தின் தீர்வையைக் குறைத்தவரென்று திருவாங்கூர் ஏல விவசாயிகள் அனைவரும் நன்கு அறிவார்கள். கனம் ரங்காச்சார்லு அவர்கள் மைசூர் திவானாக இருந்த காலத்தில் பிரஜா சபை ஒன்றைத் தோற்றுவித்து, அரசாங்கத்திற்கும் பிரஜைகளுக்கும் அன்னியோன்யத்தை அதிகமாக உண்டாக்கினார். சமஸ்தானத்தின் வருஷ வரவு செலவு திட்டங்களையும், சட்ட சபைக்குக் கொண்டு வரப்போகும் மசோதாக்களையும், புதிதாக விதிக்கப்போகும் வரிகளையும் அநுமதிக்குமாறு 250 அங்கத்தினர்களால் ஆக்கப்பட்ட இச்சபை வருடத்தில் இருமுறை கூடுகின்றது.

இந்த நல்லதொரு ஸ்தாபனம் மைசூர் நாட்டில் நல்ல வெற்றி பெற்றிருக்கிறதைக் கண்டு, கனம் V. P. மாதவராவ் அவர்கள் திருவிதாங்கூருக்குத் திவானாக வந்த பொழுது, அம்மாதிரியான சபை ஒன்றைத் திருவாங்கூரிலும் ஏற்படுத்த விரும்பினார். H. H. ஸ்ரீ மூலம் திருநாள் மகாராஜா அவர்கள் அதிக காலம் நன்கு ஆட்சி புரிந்துகொண்டு வந்தபடியால், அவரது பெயர் என்றும் நிலைத்து நின்று நினைவிலிருக்கும்படியாக ஒரு சபை ஏற்படுத்தி, அதற்கு ஸ்ரீ மூலம் பிரஜா சபை (Sree Mulam Popular Assembly) என்று பெயரிட்டார். இங்கு எழுதுவதற்கு எடுத்துக்கொண்டது இந்தச் சபையைப் பற்றித்தான்.



தேவிகுளம் தாலுகாவிலிருந்து ஆண்டு தவறாது பிரதிநிதி ஒருவர் இச் சபைக்குச் செல்வதுண்டு. வருடந்தோறும் தேவிகுளத்தில் இத் தேர்தல் நடைபெறுகிறது: ஆரம்ப காலத்திலிருந்து தேவிகுளம் தாலுகாவிலிருந்து நமது ஏல விவசாயிகளில் யார், யாரோ சென்றார்கள். என்ன என்னமோ பேசினார்கள். தேவிகுளம் தாலுகாவின் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாகப் படிக்கத் தெரியாத ஒருவர்கூட பிரஜா சபைக்குச் சென்றது என் அற்ப ஞாபகத்தில் ஆச்சர்யமாய் அமைந்தது இன்னும் அகலவேயில்லை! இந்த ஸ்ரீ மூலம் பிரஜா சபையைப்பற்றி நமது ஏல விவசாயிகள் அதிகமாக அக்கரை கொள்ளாமலிருப்பது வருந்தத் தக்கதே. இந்தச் சபை ஜெனித்தது முதல் இன்றுவரை ஏலக் குடியானவர்கள் இதன் மூலம் சிறிதேனும் நன்மை அடைந்திருக்கிறார்களாவென்று ஆழ்ந்து ஆழ்ந்து, ஆராய்ச்சி செய்து பார்த்தால், ஒன்றும் புலப்படவில்லை. உறுதியற்ற, நம்பிக்கையற்ற, திருப்தியற்ற, இரக்கமற்ற ஆனால் பசப்பான, கண் துடைக்கும் வார்த்தையான கவனிக்கப்படும் (Noted) என்றதையே கனம் திவான் வாயிலிருந்து வருவதைச் செல்லும் பிரதிநிதி கேட்டு ஆனந்தம் அடையவேண்டியது. இவ்வளவுதான் இவர்கள் அங்கு செய்தவேலை.

சென்ற 4, 5 வருடங்களாக ஏல விவசாயிகளிலிருந்து சென்ற பிரதிநிதிகளில் சிலர் சில விஷயங்களைப் பற்றிப் பேசியும் எவ்வித பயனும் ஏற்படாமற் போயிற்று. இனிமேல் வரும் தேர்தல்களில் அஞ்சா நெஞ்சு படைத்தவர்களில், அரசியல் விஷயங்களில் அறிவும், அநுபவமும் அடைந்தவர்களில், உண்மை உழைப்பாளிகளில் ஒருவரைத் தெரிந்தெடுத்து அனுப்பல் வேண்டும். போனதையும், வந்ததையும் எண்ணி எண்ணி ஏங்காமல், இரங்காமல் இனிமேல் வேண்டுவன செய்வோமாக.

ஏல விவசாயிகள் செய்த நற்றவப் பயனாகத் திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறபடியால், ஏல விவசாயிகளுக்குள் ஓர் ஐக்கியம் உண்டாகி யிருக்கிறது. இச் சங்கம் ஆரம்ப 3, 4 வருடங்களில் செய்த வேலைகள் ஒன்றல்ல, இரண்

டல்ல, பலவாகும். தலைமைச் சங்கத்தின், கிளைச் சங்கங்களின் வருடப் பொதுக் கூட்டங்களில் அழகாகப் பேசித் “ திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திற்குத் தனியாக ஒரு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமெனத் திருவாங்கூர் சர்க்காரை இம் மகா நாடு கேட்டுக் கொள்கிறது ” என்று ஒழுங்காகத் தீர்மானம் நிறைவேற்றுவது வழக்கம். பொதுக் கூட்டங்களில் தீர்மானிக்கப்படும் தீர்மானங்கள் என்ன வாயினவென்று பொது ஜனங்களுக்கு ஒன்றுமே தெரியாது. இப் பிரதிநிதித்துவத்திற்காகச் சங்கம் சரியாக வேலை செய்திருந்தால், எப்பொழுதே பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கும்.

சில பெரிய எஸ்டேட்டுகள் அடங்கிய ஒவ்வொரு ஐரோப்பியத் தோட்டக்காரர் சங்கத்திற்கும் ஒவ்வொரு பிரதிநிதியாக மலையிலுள்ள நான்கு ஐரோப்பியத் தோட்டங்காரர் சங்கங்களுக்கு 4 ஸ்தானங்கள் ஸ்ரீ மூலம் பிரஜா சபையில் வைத்துவிட்டு, 2,000 அங்கத்தினர்களுக்கு அதிகமாக அடங்கிய நம் பெரும் சங்கத்தை என்ன என்று கூடத் திருவிதாங்கூர் சர்க்கார் கவனிக்காதிருக்கிறது மிக மிக வருந்தத்தக்க விஷயமாகும். சங்கம் ஜெனித்து ஆறு ஆண்டுகளாகியும் நம் சங்கத்தைச் சர்க்கார் சரியாக மரியாதை செய்யாமலிருப்பதால், நாம் தகுந்த முறையில் கிளர்ச்சி செய்து வேண்டியவைகளை அடைய முயற்சிப்போமாக.

ஆனால் ஐரோப்பியர்களுக்கோ? நமது திருவாங்கூர் அரசாங்கம் ஏகாதிபத்தியத்திற்கு அடங்கி, சக்கிரவர்த்தியின் ஜாதியார்களென்று எண்ணி ஐரோப்பியர்களுக்கு அதிகமாக கௌரவங் கொடுக்கிறது போலிருக்கிறது. இருவருக்கும் பொதுவான அரசாங்கம் ஒருவர் கண்ணில் சுண்ணாம்பும், மற்றொருவர் கண்ணில் வெண்ணையும் தடவுவது ஏனோ? சபாஷ், நல்ல ராஜ பக்தி! நல்ல ராஜ தந்திரம்!!

இவ் வருடத்தில் ஸ்ரீ மூலம் பிரஜா சபைக்குப் பிரதிநிதியாகத் திருவாங்கூர் ஏல விவசாயிகள் போடிநாயக்கனூர் கிளைச் சங்கத்தின் காரியதரிசி ஜனாப், உசேன் கான் ராவுத்தரவர்கள் தெரிந்



தெடுக்கப் பட்டிருக்கிறது ஏல விவசாயிகளில் பலருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியே. சமீபத்தில் உத்தமபாளையத்தில் இவரைச் சந்தித்து இதைப் பற்றி பேசிய பொழுது நம் சங்கத்திற்கெனத் தனியாக ஒரு பிரதிநிதி ஸ்தானம் கொடுக்கப்பட வேண்டுமெனத் தீர்மானமொன்று கொண்டுபோகுமாறு நான் அவரை வேண்டிக்கொள்ள அவரும் அவ்வாறு செய்வதாக வாக்குறுதி அளித்தார் இன்னும் இவர் மைசூர் பிரஜாசபையின் விஷயங்களை அங்கு சென்று, அறிந்து கொண்டுவருமாறு சீக்கிரத்தில் மைசூருக்குச் செல்ல விரும்புவதாகவும் அறிவித்திருக்கிறார்.

இவர் ஊக்கமும், உற்சாகமும், உறுதியும்கொண்ட வாலிபர். இவர் இவ்வாறு ஒரு தீர்மானம் கொண்டுவந்து, நிறைவேற்றப் பட்டால், நமது சங்கத்திற்குச் சரியான வேலைசெய்ததாக இவர் கருதப்படுவார். இவ்விதம் அவசியமாகச் செய்வாரென்று எதிர் பார்க்கப் படுகிறது.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

# பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்.

## (ஏல விவசாயியைப் பற்றி)

## நவசக்தி

### சென்னை (24—8—27)

"ஏல விவசாயி" என்னும் பெயர் வாய்ந்த ஒரு தமிழ் மாதாந்த சஞ்சிகை எமது பார்வைக்கு வந்தது. அதைக் கண்ணுற்ற போது எமக்குற்ற மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. நமது நாட்டில் பலதிறப் பத்திரிகைகள் தோன்றி வளர்ந்து வருகின்றன. அவைகளுள் விவசாயத்தைப்பற்றிய பத்திரிகைகள் மிகச்சில. அம்மிகச் சிலவும் வெளியீட்டளவில் கடனாற்றி வருகின்றன. "ஏல விவசாயி"யோ வெறும் வெளியீட்டளவில் தலைகாட்டவில்லை. அஃது உரம்பெற்ற கால்கொண்டு பொருந்திய அமைப்பெனும் ஒரு நிலையத்தினின்றுந் தோன்றுகிறது. "ஏல விவசாயி"யின் தோற்றுவாய் நல்லூற்றுடையது என்பது செவ்வனே விளங்குகிறது.

"ஏல விவசாயி" என்னுங் குழவி நல்லமைப்பு வாய்ந்த ஒரு சங்கமெனுந் தந்தையையும், ஏல விவசாயத் தொழிலெனும் தாயையுங் கொண்டுண்மையால், அஃது இடையூறின்றி வளர்ந்து நாட்டுக்கு நலன் செய்யுமென்பதில் ஐயமில்லை.

எல்லாத் தொழில்களினுந் தலைசிறந்தது விவசாயமென்பது எவரும் ஒப்ப முடிந்த உண்மை. விவசாயம் வாழ்விற்கு உயிர் போன்றது. அவ்விவசாயத்தைப் பெருமிதமாக உடையது நமது நாடு. நமது நாட்டவருள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் விவசாயிகள் என்பது கவனிக்கத்தக்கது. அத்தகைய நாட்டிற்கு விவசாய அறிவு வளர்ச்சிக்குரிய பலகருவிகள் இன்றியமையாதன. அவைகளுள் ஒன்று பத்திரிகை. மேல் நாட்டில் விவசாயத்தைப் பற்றிய பத்திரிகைகள் எண்ணில; எண்ணில. அப் பத்திரிகைகள் விவசாய வளர்ச்சிக்கெனப் புது புது முறைகளை அறிவுறுத்துகின்றன. அதனால் அந்நாட்டில் திருமகள் திருவோலக்கங் கொண்டிருக்கிறாள். விவசாயத் துறைகளைப் பண்படுத்த நமது நாட்டார் பெரிதும் முயல்வதில்லை. முன்னோர்கள் உழுத நிலத்



தையே இன்னும் நம்மவர்கள் உழுது கொண்டிருக்கிறார்கள். புது முறைகள் கண்டு செல்வம் பெருக்கும் முயற்சியில் நம்மவர்கட்கு ஊக்கம் எழுவதில்லை.

அவ்வூக்கம் நாட்டின் ஒரு கோடியில் எழுவது கண்டு கழி பேருவகை யுறுகிறோம். திருவாங்கூரில் தொழிலுடன் சங்கமும், சங்கத்துடன் பத்திரிகையும் எழுந்தமை நாட்டின் வளர்ச்சிக்கு ஓர் அறிகுறியாகும்.

திருவாங்கூரும் அதைச் சார்ந்த இடங்களும் ஏல விவசாயத்தில் பேர் பெற்றிருத்தல் உலகறிந்ததொன்று. அப்பாங்கரின் விளையும் ஏலம் முதலியவற்றைப் பற்றிய குறிப்புக்கள் பழந்தமிழ் நூல்களிலுமுண்டு. மேல் நாட்டு வாணிபர்கள் முதல் முதல் அவண் போந்தபோது தங்கள் நாட்டு மயக்கப் பொருளைப் பண்டமாற்றாக ஈந்து, மலையாள நாட்டு மணங்கமழ் பொருளைப் பெற்றுச் சென்றார்கள் என்று சில புலவர்கள் பாடியிருக்கிறார்கள். ஏலம் முதலிய மணங்கமழ் பொருட்கு மலையாளம் பேர் பெற்றது என்பதை விரித்துக்கூறல் வேண்டுவதில்லை.

திருவாங்கூரிலுள்ள ஏலவிவசாயிகள் தற்காலத்துக்கு வேண்டற்பாலதாய அமைப்பு முறையின் இன்றியமையாமை யுணர்ந்து, ஒரு சங்கங் கண்டு, அதன் வாயிலாக ஒரு பத்திரிகை வெளியிட முற்பட்டது போற்றற்குரியது. அவர்கட்கு நமது நன்றியுரியதாக.

"ஏல விவசாயி" வெறும் ஏலத்தைப் பற்றியே கருத்தைச் செலுத்துவதாகத் தோன்றவில்லை. அப்பத்திரிகை ஏல விவசாயத்தில் கவலை செலுத்துவதோடு வேறு பல வாழ்வுத் துறைகளின் மீதுங் கவலை செலுத்தி வருகிறது. வாழ்விற்குரிய பல செம்பொருள்கள் "ஏல விவசாயி"யில் மிளிர்கின்றன எமது பார்வைக்கு வந்த முதலிரண்டிதழ்கள், ஏல விவசாயிகளுக்கு விஞ்ஞாபனம், ஏல விவசாயிகளுக்கோர் விண்ணப்பம், பத்திரிகைகளும், அவற்றின் பயனும், சங்கங்களும் அவற்றின் பயனும், புரூக்பாண்ட் கம்பெனி, ஐக்கிய இயக்கம, கூட்டுறவு இயக்கம், திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கம், விவசாயப் பழமொழி

கள், தமிழரும் தாய் மொழியும், ஏலம் ஏற்றுமதி செய்யப்பட்ட விவரம், திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கமும், அதன் கிளைகளும் முதலிய பொருள்களை உள்ளுறையாகக் கொண்டிருக்கின்றன. இப்பொருள்களை உற்று நோக்குவார்க்குப் பத்திரிகையின் நோக்கம் இனிதுபுலனாகும். பத்திரிகையின் நோக்கங்கள் அணியணியாக வகுக்கப் பட்டிருக்கின்றன. அவைகளின் தொகை முப்பத்தேழு. அவைகளில் வாழ்வுக்குரிய பொருளெலாஞ் செறிகின்றன.

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கங் கண்டது பெருவினையன்று; பத்திரிகை வெளியிட முற்பட்டதும் பெருவினையன்று; பத்திரிகை நடாத்தத் தக்க ஆசிரியர் ஒருவரைத் தெரிந்தெடுத்தே பெரு வினையாகும்.

"ஏல விவசாயி"யின் முகப்பில் பொலியும் "R. நாராயணசாமி, ஆசிரியர்" என்னுங் காட்சி எனக்குப் பெருமகிழ்ச்சி யூட்டிற்று. திருவாளர் நாராயணசாமி செட்டியார், தேவாரம் என்னும் பதியினின்றும் வெளிப்போந்து கொண்டிருந்த "தேவாங்க மித்திரன்" என்னும் பத்திரிகாசிரியரா யிருந்து அதைத் திறம்பட நடாத்தியவர்; பன்னெடு நாளாகத் தேச சேவைசெய்து வருபவர்; பல துறைகளிலும் ஆராய்ச்சி யுடையவர்; தமது ஆராய்ச்சிகளை எளியமுறையில் பிறர்க்குப் பயன் படுத்தும் ஆற்றல் வாய்ந்தவர்; நற்குணமுடையவர். சுருங்கக்கூறின் பிறர்க் குழைத்தல் என்னும் பெருந் தொண்டில் பற்றுடையார் என்று கூறலாம். அறிவும் ஆற்றலும் தகைமையும் மலர்ந்து காய்த்துக் கனிந்துள்ள திருவாளர் நாராயணசாமி செட்டியாரை ஆசிரியராகத் தெரிந்தெடுத்த ஏல விவசாய சங்கத்தார்க்குத் தமிழுலகங் கடமைப்படுவதாக. மொழியும் சமயமும் நாடும் நேரிய வழியில் வளர வேண்டுமேல் திருவாளர் நாராயணசாமி செட்டியார் போன்ற அறிஞர்கள் சேவை வேண்டற்பாலது.

திருவாளர் நாராயணசாமி செட்டியார் முதலிதழில் முகவுரை என்னுந் தலைப்பிட்டு எழுதியுள்ள கட்டுரைப் பொருள்களில் ஒளிருஞ் சில குறிப்புக்களை மட்டும் ஈண்டு எடுத்துக்காட்டுகிறோம். அவை வருமாறு:—



"ஏல விவசாயி" மலர் 1. இதழ் 1-ல் 4-வது பக்கத்திலுள்ள விவசாயம் என்ற பாரா முதல் 6-வது பக்கத்திலுள்ள விவசாயத்தில் என்ற பாராவில் மணக்கட்டும் என்றது வரைக்கும் எடுத்துக்காட்டாக இங்குக் குறிக்கப் பட்டிருக்கிறது.

இவ்வாறு எளிய நடையில் கருத்துக்களை வெளியிடும் அறிவாற்றலுடைய ஒருவரை ஆசிரியராகக் கொண்டதும், வளர்ச்சிக்குரிய நல்லமைப்புக்களைக் கொண்டதுமாகிய "ஏல விவசாயி"யை ஆதரிக்க வேண்டுமென்று பொதுவாகத் தமிழ் மக்கட்கும் சிறப்பாக விவசாயிகட்கும் சொல்லவும் வேண்டுமோ?

---

## குடியரசு, ஈரோடு.

### 28—8—27.

---

"ஏல விவசாயி" என்னும் பெயர் பெற்ற ஒரு தமிழ் மாதாந்த சஞ்சிகை எமது பார்வைக்கு வந்தது. இது எழுபது எண்பதாயிரம் ஏக்கர் ஏல விவசாய பூமிகளில் சுமார் 40 லட்சம் 50 லட்சம் ரூபாய் பெறுமான மாசூல்களை உண்டாக்கும் 2 ஆயிரத்துக்கதிகமான ஏல விவசாயிகளை அங்கத்தினராகக் கொண்ட திருவாங்கூர் ஏல விவசாய சங்கத்தினின்றும் வெளியிடப்பட்டு வருவது. பல துறைகளிலும் ஆராய்ச்சியுள்ள திரு. ஆர். நாராயணசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டது.

விவசாயமே எல்லாத்தொழில்களிலும் சிறந்ததாயிருந்தும், நம் நாடு விவசாயத்தையே ஆதாரமாகக் கொண்டிருந்தும், விவசாய வளர்ச்சிக்குரிய புது விதமான கருவிகளைக் குறித்தும், புது முறைகளைப்பற்றியும், ஐக்கிய இயக்கம, கூட்டுறவு இயக்கம், விவசாயச் சங்கம் ஆகியவைகளைப் பற்றியும், விவசாயப் பொருள்

களைச் சேகரம் செய்து செலவழிக்கும் முறைகளைக்குறித்தும் நமது நாட்டில் தாய்ப் பாஷையில் உலவும் பத்திரிகைகள் மிகச் சிலவே. ஆகவே இவ்விஷயங்களைக் குறித்தும், மிளகு, இஞ்சி, லவங்கம், எலுமிச்சை, ஆரஞ்சு, காப்பி, சணல் ஆகியவைகளைக் குறித்தும், விசேஷமாக ஏல விவசாயத்தைக்குறித்தும், முதலாளி, தொழிலாளிகளைக் குறித்தும், தமிழ் மொழி, தமிழ்நாடு, திருவாங்கூர் சரித்திரம், அரசியல் ஆகியவைகளைப்பற்றியும் இந்த "ஏல விவசாயி" என்னும் பத்திரிகை எழுதிவரும். ஆதலால் இப்பத்திரிகையை விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளிகள், முதலாளிகள், தமிழ் நாட்டார், தாய் நாட்டார் ஆகிய அனைவரும் ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

---

## தென் நாடு, சேலம்.

### 20—8—1927.

---

"ஏல விவசாயி" யின் இதழ்கள் 1, 2, 3 வரப்பெற்றோம். இஃது மதுரைஜில்லா, உத்தமபாளையத்திலிருந்து மாதமொரு முறை வெளிப்போந்துலாவும் அரிய சஞ்சிகை. இதன் ஆசிரியர் ஆர். நாராயணசாமி செட்டியார். இதில் பல அறிஞர்களின் கட்டுரைகள் மலிந்து பொலிந்து விளங்குகின்றன. நம் நாட்டிற்கு முக்கிய ஜீவாதாரமாயுள்ள விவசாயிகளின் நன்மையை, முன்னேற்றத்தை நாடி வெளிப்போந்துள்ள இப்பத்திரிகைக்கு நாம் நல்வரவு கூறுகின்றோம். நம் நாட்டினர்க்கும், சிறப்பாக விவசாயிகளுக்கும் ஏற்ற பத்திரிகை இஃதொன்றேயெனக் கூறுவது மிகையாகாது. ஏழை விவசாயிகளின் கஷ்ட நஷ்டங்களை அச்சமின்றி எடுத்துரைப்பதில் இப்பத்திரிகை முன்னிற்பது போற்றற்பாலது. திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தினரின் ஒற்றுமையை நாம் பெரிதும் மெச்சி உச்சி மேற் கொள்ளுகின்றோம். இதைப்போன்ற



பல பத்திரிகைகள் நம் நாட்டில் வெளிப்போந்துலாவ வேண்டிய தவசியம். இப்பத்திரிகையின் ஆசிரியர் முன்னம் "தேவாங்க மித்திரன்" என்னும் பத்திரிகையை நடத்திவந்திருப்பதினின்றே இவர் இப்பத்திரிகையை நன்கு நடாத்தும் திறமையுடையாரென்பது நன்கு விளங்குகின்றது. இப் பத்திரிகை நீடூழி வாழ்க.

---

## கலிகாலதீபம், காரை நகர்.

### 3—9—27.

---

இது திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து மாசந்தோறும் வெளிவரும் ஓர் அரிய சிறந்த பத்திரிகை. இதில் ஏல விவசாயிகளின் தாற்பரியங்கள் எழுதப் பட்டிருக்கின்றன.

---

## அகிலபாநு, மாயவரம்.

### 28—8—27.

---

ஏல விவசாயி என்னும் பேர் கொண்ட ஒரு மாதாந்தரப் பத்திரிகையின் முதல் இரண்டு இதழ்களை வரப் பெற்றோம். இது வரையில் தேசீய வேலைகளில் தொண்டு பட்டிருந்த திரு ரா. நாராயணசாமி அவர்கள் இதன் ஆசிரியர். இப் பத்திரிகையில் முக்கியமாக ஏல விவசாயிகளுக்கு ஏற்ற விஷயங்களும் பொதுவாகக் கிருஷிகருக்கனுகூலமாக விஷயங்களும் வெளிவரும். இதை எல்லோரும் ஆதரிக்கவேண்டும்.

## சுதேசமித்திரன், சென்னை.

4—8—27.

---

ஏல விவசாயி என்பது திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து வெளிவரும் ஒருமாதாந்தரப் பத்திரிகை. "தேவாங்க மித்திர"னின் மாஜி ஆசிரியரான ஸ்ரீமான் ஆர். நாராயணஸ்வாமி இதன் ஆசிரியர். மதுரை ஜில்லா உத்தமபாளையத்தில் இது பிரசுரிக்கப்படுகிறது. இவ்வாண்டு சித்திரை முதல் மூன்று மாத இதழ்கள் வரப்பெற்றோம். திருவாங்கூர் மகாராணி ரீஜண்டுடையவும், திருவாங்கூர் மகாராஜாவினுடையவும் படங்கள் இவைகளில் முதல் பக்கத்தில் காணப்படுகின்றன. ஏலத்தைப்பற்றின விஷயங்கள் எல்லாம் இவைகளிற் காணலாம். இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் சென்ற சில வருஷங்களாக ஏற்றுமதியான ஏலத்தின் அளவு, மதிப்பு முதலிய விபரங்கள் இத்தகைய பத்திரிகையில் காணப்படுவது வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் மிக்க உபயோகமானது. இப் பத்திரிகையின் நோக்கங்கள் மிக விரிவானவைகளாயிருக்கின்றன. திருவாங்கூர் ஏல விவசாய சங்கங்களின் தீர்மானங்களையும் அறிக்கைகளையும் வெளியிடுவது முதலான சொந்த விஷயம் தவிர, மலைகளில் நாகரீக மற்றுப் பூர்வ குடிகளாக வசிக்கும் சில ஜாதியார் விஷயமாயும் சர்க்காருக்கு தெரிவித்துக் கொள்ளுதலும், ஐக்கிய விஷயத்தைப் போற்றுதல் போன்ற பொது விஷயங்களிலும் சிரத்தை எடுத்துக்கொள்ளுதலும் பாராட்டத் தக்கவை. ஏல சம்பந்தமான புஸ்தகங்கள், கட்டுரைகள் முதலிய கிடைக்கும்படிக்கும் இது முயற்சி செய்யும்.

---



## மெய்கண்ட மித்திரன், பிரிட்டோரியா.

தென்னாப்பிரிக்கா.

26—9—27.

---

இப் பெயரிய மாத சஞ்சிகையின் முதலிலிருந்து மூன்று சஞ்சிகைகள் வரப்பெற்றோம். ஏலம் கிராம்பு மிளகு ஆகிய மூன்று பொருள்களுமே ஐரோப்பியர் இந்தியாவை ஆண்டு வருவதற்குக் காரணமாயிருந்தனவென்பது சரித்திர முணர்ந்தாரறிந்ததாகும். இவ்வன்னிய நாட்டில் அப்பொருள்களுக்கு எவ்வளவு மதிப்புண்டு என்பதை அவைகளின் விலையின் ஏற்றத்தாலறிகிறோம். இவைகள் இந்தியாவின் தென் மேற்குக் கடற்கரை யோரங்களிலும், திருவாங்கூர் ராஜியத்திலும் பயிரிடப்படுகின்றன. இவைகளைப் பயிரிடும் விவசாயிகள் ஊக்கமின்மையாலும் ஒற்றுமைக் குறைவாலும் வியாபாரிகளின் சூழ்ச்சியாலும் தரகர்களின் பகட்டுரைகளாலும் நஷ்டமடைந்து உழைப்புக்குரிய லாபத்தைப் பெறுகின்றனர் ஆதலால் அவர்களுள் ஒற்றுமை, ஊக்கம், பயிர் செய்கையின் புதுமுறை, கூட்டுறவு முதலியவைகளை உண்டாக்கி, விலைப்பருவம், விற்குமிடம், விற்றற்குரியகாலம் முதலியவைகளை அவ்வப்போது தெளிவாயறிவித்து, நல்ல லாபத்தை அடைவிக்கும் மார்க்கத்திலுழைப்பதற்கே "ஏல விவசாயி" என்னும் இப்பத்திரிகை தொடங்கப் பட்டிருக்கிறது. ஐரோப்பியர் எவ்விதத் தொழிலுக்கும் ஒவ்வொரு பத்திரிகையாவது வைத்து நடத்தி வருவதை நாமறிவோம். ஆகவே இப்பெரிய விவசாயத்துக்குப் பத்திரிகையின் பேருதவி அவசியம் வேண்டப்படுவதேயாகும். நமக்குக் கிடைத்த மூன்று சஞ்சிகைகளிலும் ஏலவிவசாயிகள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியமான மார்க்கங்கள் தெளிவாயெழுதப்பட்டிருக்கின்றன. இப்பத்திரிகை ஏலவிவசாயிகளேயன்றி பொதுவாய் தமிழராவர் ஒவ்வொருவரும் படித்தற்குரியது. இதன் ஆசிரியர் பத்திரிகை உலகில் நன்கு பழகியவராவர்.

தமிழ் மொழியின் வளர்ச்சியில் மிக்க ஆர்வம் உடையவர். ஆசிரியரால் எழுதப்பட்ட "தமிழரும் தாய்மொழியும்" என்ற அரிய வியாசம் நமது மித்திரனில் எடுத்துப் பிரசுரித்திருப்பதை நேயர்களறியலாம். ஆகவே இப்பத்திரிகை வெளிநாட்டு இந்தியரும் போற்றற்குரியதேயாம்.

---

## சுதேச பரிபாலினி, ரங்கூன்.

### 2—9—27.

---

இப்பெயர்கொண்ட மாதாந்தர சஞ்சிகையின் முதல் வருடத்திய ஆரம்ப இதழ்களில் முதல் மூன்று இதழ்கள் அன்புடன் வரப்பெற்றோம். இச்சஞ்சிகையானது மதுரை ஜில்லா உத்தமபாளையத்திலிருந்து பிரசுரிக்கப்படுகிறது. இதன் ஆசிரியர் முன்பு "தேவாங்க மித்திரன்" பத்திரிகையின் ஆசிரியராக விருந்த திரு. ஆர். நாராயணசாமியவர்களாவர். இச்சஞ்சிகையானது திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திற்குச் சொந்தமானதாகும். ஆகையால் இச்சங்கத்தினர் நாட்டுக்கு உழைக்க வேண்டுமென்ற உண்மையான ஆர்வமும் ஊக்கமும் நிறைந்துள்ள ஆசிரியரை அன்புடன் ஆதரிப்பார்களாகவும். இப் பத்திரிகையின் நோக்கங்கள் மிக விரிவானவைகளாயிருக்கின்றன. மலைகளில் நாகரீகமற்றுப் பூர்வ குடிகளாக வசிக்கும் சில ஜாதியார் விஷயமாயும் சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்ளுதலும் ஐக்கிய விஷயத்தைப் போற்றுதல் போன்ற பொது விஷயங்களிலும் சிரத்தை எடுத்துக் கொள்ளுதலும் பாராட்டத்தக்கவை.

---



## தமிழன், கோலார் தங்க வயல்.

### 31—8—27.

---

மதுரை ஜில்லா உத்தமபாளையத்தினின்று பிரசுரிக்கப்பட்டு வரும் "ஏல விவசாயி" என்னும் பெரிய மாதாந்த சஞ்சிகை வரப்பெற்றோம். இது சென்ற சித்திரை மாதம் ஆரம்பிக்கப்பெற்று இதுவரை மூன்றிதழ்கள் வெளிவந்திருக்கின்றன. "தேவாங்க மித்திரன்" என்னும் பத்திரிகையின் ஆசிரியரா யிருந்தவரும் மிக்க அநுபவம் வாய்ந்தவருமாகிய ஸ்ரீ. ஆர். நாராயணசாமி அவர்களே இதன் ஆசிரியராகும். இவர் "தமிழ"னில் மிகு சிறந்த கட்டுரைகள் எழுதிவருவதும் நேயர்கள் அநேகமாக அறிந்திருக்கலாம். திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தினரால் இச்சஞ்சிகை நடத்தப்பட்டு ஏல விவசாயத்தைப் பற்றியும் வர்த்தகத்தைப் பற்றியும் அநேக சிறந்த முறைகள் இதில் காணப்படினும், ஆசிரியரின் அநுபவமிக்கத் திறமைக் கேற்ப பொதுநலன் பற்றியும், கூட்டுறவினைப் பற்றியும், அரசியல் பற்றியும் அநேக சிறந்த கட்டுரைகள் காணப்படுகின்றன.

---

## லோகோபகாரி, சென்னை.

### 18—8—27.

---

மதுரை ஜில்லா உத்தமபாளையத்திலிருந்து தோன்றி வரும் "ஏல விவசாயி" என்ற மாதப் பத்திரிகையின் முதல் மூன்றிதழ்கள் வரப்பெற்றோம். இது திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தாரின் பத்திரிகையாகும். முன் தேவாங்க மித்திரன் பத்திராசிரியராக இருந்த திருவாளர் தேவாரம் ரா. நாராயணசாமி

செட்டியார் இதன் ஆசிரியராயிருக்கிறார். நண்பர் நாராயணசாமி அவர்களை நாம் சில ஆண்டுகளாக அறிவோம். அவர் நாட்டுக்கு உழைக்க வேண்டுமென்ற உண்மையான ஆர்வமும் ஊக்கமும் நிறைந்தவர். அவருக்குப் பலவழிகளிலும் துணை புரிதல் ஏல விவசாயிகளின் கடமையாகும். நமது நாட்டிலிருந்து ஏராளமான ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், புளி, மிளகு, மிளகாய் முதலியவை மூலப் பொருள்களாகவே வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கின்றன. ஏலத்தை மூலப்பொருளாக அனுப்பிவரும் ஏல விவசாயிகள் ஏலத்தைத் திராவகமாக ஏற்றுமதி செய்து அதிக லாபஞ் சம்பாதிக்கும் காலம் விரைவில் வருமென்று நம்புகிறோம்.

---

## அருணகிரி, பள்ளத்தூர்.

### 18—8—27.

இப்பெயர்கொண்ட மாதசஞ்சிகை யொன்று வரப்பெற்றோம். இதன் ஆசிரியர், உத்தம தேசாபிமானியும், "தேவாங்கமித்திரன்" ஆசிரியராயிருந்தவருமான ஸ்ரீமான் ரா. நாராயணசாமி செட்டியாராகும். திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கத்திலிருந்து வெளியாகும் இம்மாசிகையில இந்தியாவின் உயிர் நாடிகளாயுள்ள விவசாயம், வியாபாரம், கைத்தொழில் ஆகியவைகளைப்பற்றி அரிய கட்டுரைகள் இருக்கின்றன. மற்றும் கூட்டுறவு இயக்கம், சங்கங்களும் அவற்றின் பயனும், தமிழரும் தாய்மொழியும் என்னும் பல வியாசங்களும் சாலவும் பாராட்டத்தக்கவை. இம்மாசிகை நாடொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து தேசத்திற்கு நன்மை பல செய்யுமென எதிர்பார்க்கிறோம்.

---



## விரோதினி, சென்னை.

### ஆகஸ்டு 1927.

'ஏலவிவசாயி' லவங்க சாமான்களின் விவசாய முன்னேற்றத்தைக் கருதி, ஏல விவசாய சங்கத்தாரால் வெளியிடப்படும் தமிழ் மாதப் பதிப்பு. அவ் விவசாயத்திற்குகந்த பல நுட்பங்கள் வெகு தெளிவாய் வெளியிடப்பட்டிருக்கின்றன. தற்பொழுது ஏராளமான லவங்க சாமான் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. வெளி நாட்டார் அவற்றினின்றும் பல சாமான்கள் தயார் செய்கின்றனர். அவற்றைப்பற்றிய குறிப்புகளும் முறைகளும் சேகரித்து இப் பத்திரிகையில் வெளியிடப்படுமாயின் பெருத்த நன்மை பயக்குமென நினைக்கிறோம். விவசாய உலகத்தின் பெயரால் இப் பத்திரிகைக்கு நல்வரவு கூறுகிறோம்.

---

## கூட்டுறவு வியாபாரம்.

"ஏல விவசாயி"யின் ஆசிரியர் ஸ்ரீமான். R. நாராயணஸ்வாமி யவர்கள் இம்மாத இதழுக்கு "கூட்டுறவு வியாபாரம்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுமாறு பணித்துள்ளார். தற்கால நிலைமைக்கு நந்தமிழ் நாட்டு ஏல விவசாயிகள் ஒவ்வொருவரும் கூட்டுறவு வியாபார முறைகளைப்பற்றி ஒரு சிறிதேனும் அறிந்திருக்க வேண்டுவதவசியமாகும். ஆகவே இப் பத்திரிகையில் கூட்டுறவு வியாபாரத்தின் முறைகளைப் பற்றியும், நன்மைகளைப்பற்றியும் விவரிக்கும் எத்தனை வியாசங்கள் வெளிவரினும் நலமேயாம். எனவே, இதன் கீழ் கூட்டுறவு வியாபாரமென்றால் என்ன, அதைக் கைக்கொள்ள வேண்டிய அவசியமியாது என்ற விஷயங்களைப்பற்றி ஒரு சிறிதாராய்வது பயனுடைத்தே யெனக் கருதுகிறோம்.

கூட்டுறவு வியாபாரம் என்றால் பலபேர் கூட்டுப் பங்காளிகளாக ஒன்று சேர்ந்து, ஒரு முகமாகப் போட்டியின்றி, தம்முள் ஒற்றுமை யுற்றுப் பண்டங்களைக் கொள்ளவும், விற்கவும் செய்து ஊதிய மடைந்துவரும் வாணிப முறைக்கே பொருள்படும். பலபேர் பங்காளிகளாகச் சேர்ந்து தத்தங் கைமுதல்களைப் போட்டு ஒரு அளவிட்ட மூல நிதியை ஏற்படுத்தி அதனைக்கொண்டு தக்க அமைப்புகளுடன் விரிந்த அளவில் வியாபாரம் செய்வதென்றால் வியாபார மூலதனம் சிறிய அளவிலிருப்பது திண்ணம். அதனால் விலை பேறப்பெற்ற—லாபந்தரத்தக்க பண்டங்களை அதிக அளவில் வாங்குவதால் விலை சரசமாகுமென்பதும், சுருங்கிய அளவில் வாங்குவதால் விலை அதிகப்படுமென்பதும் யாவருமுணர்ந்ததே. இதனால் அவ் வியாபாரிகளுக்கு கொள்விலையே அதிகப்படுகின்றது. அக்காரணத்தால் அப்பொருள்களை விற்கையில் அதிக விலைக்கு விற்கவேண்டிய அவசியமேற்படுகிறது. இந்நிலையில் வியாபாரிகள் தனித்தனியே பொருள்களை விற்க வேண்டியிருப்பதால் தத்தம் பொருள்களை முன்னாடி விற்பனையாக்கவேண்டி மற்றவர்களுடன் போட்டியிட்டு விலையைக் குறைக்க வேண்டியும் வருகிறது. பெரிய முதல் படைத்த வியாபாரி யொருவன் முன்வந்தால் அவனோடு சிறிய வியாபாரிகள் பலரும் போட்டியிட முடியாமல் கஷ்டமடைகின்றனர். மேலும் சிறிய முதல் வைத்து வாணிபஞ் செய்பவர்கள் வாங்கிய சரக்குகளை அவற்றிற்கேற்ற விலை வருங்காலம் வரும்வரையில் வைத்திருக்கவும் முடியாமற் போகிறது. பணத்திற்கு விரைவில் தேவை யேற்படுவதால் கையிலுள்ள பண்டங்களை நஷ்டத்தையுங் கருதாமல் போன விலைக்கு விற்றுத் தீரவேண்டி நேருகிறது. இவ்விடையூறுகளால் குறித்த தவணையிற் பணத்தைச் செலுத்தவும், பொருள்களை வாங்கவும், குறித்த காலத்தில பொருள்களை விற்கவும், பணத்தை வாங்கவும் முடியாமல் நாணயத்தை யிழக்கின்றனர். அதிலும் வட்டிக்குக் கடன்வாங்கி வாணிபம் செய்பவரின் நிலை சொல்லத்தரமன்று. தவணை வட்டிக்குக் கடன்வாங்கி வியாபாரம் செய்து வருகையில் பண்டங்களின் விலை, மதிப்பு, [illegible], உபயோகம், கிராக்கி



முதலியவை நாட்டில் ஒரு நிலையில் நில்லாமல் அடிக்கடி மாறுவதால, எதிர்பார்த்த காலத்தில் வியாபாரம் லாபகரமாக நடவாமற் போகிறது. அச்சமயத்தில் தவணை வட்டிக்காரருக்குக் கடனைக் கொடுத்துத் தீர்ப்பதற்கில்லாமல் அவ்வியாபாரி அளவிடமுடியாத அவஸ்தையடைகிறான். வியாபாரத்தில் சிறிது விலை கூடுதலாயிருப்பினும் நல்ல பண்டங்களா யிருப்பவற்றை வாங்கினால்தான் லாபங்கிடைக்கும். சில்லரை வியாபாரிகளுக்கு அப்படிச் செய்ய முடிவதில்லை. ஆகவே, உபயோகமற்ற தாழ்ந்த சரக்குகளை வாங்கி அவற்றை விற்குமிடத்து அவற்றை நல்ல சரக்குகளென்று கூறியும், சரக்குகளைக் கலப்பு செய்தும், வஞ்சனையாக மாற்றியும் விற்கின்றனர். அதனால் பின்னாளில் அவர்களுடைய மோசம் வெளியாகி வாடிக்கைக்காரர்களின் மதிப்பை யிழக்கின்றனர். இது போன்ற மற்றும் பல குறைபாடுகளும், கஷ்டங்களும் தனித்தனியே அவரவரிஷ்டம்போல் வியாபாரம் செய்யத் தலைப்படும் சில்லரை வியாபாரிகளுக் குண்டாகின்றன.

மேலே கூறிய கஷ்டங்களனைத்தும் நீக்குவதற்காகவே கூட்டுறவு வியாபார முறை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பலபேர் ஒன்றாகச் சேர்ந்து, தத்தங் கைப்பொருள்களை ஒன்றாக்கி மூலதனமாக வைத்து வியாபாரம்செய்ய முற்பட்டால் முற்கூறிய இடையூறுகளனைத்தையும் அகற்றி விடலாம். இம்முறையில் மூலதனமும் பெரிதாகச் சேருகிறது; பொருள்களை சகாய விலையில் அதிக அளவில் வாங்கலாம்; ஏற்ற விலை வருங்காலத்தை எதிர்பார்த்துக் கூடுதலான விலைக்கு விற்கலாம்; தொழிலில் போட்டியில்லாமையால் வாங்குவதிலும், விற்பதிலும் கட்டுப்பாடாக வேலை செய்யலாம். வியாபாரத் துறையில் பழக்கமும், அனுபவமும், அறிவும் படைத்த இரண்டொருவர் அந்த ஸ்தாபனத்தில் சேர்ந்திருப்பரேல் அவரது திறமையால் நடைபெறும் வியாபாரத்தின் பயனை—ஊதியத்தை அதைச்சேர்ந்த பங்காளிகளாகிய பலரும் அடைகின்றனர். அந்த ஸ்தாபனத்திற்குக் கடன் வாங்க நேரிட்டாலும் பெருந்தொகையைக் குறைந்த வட்டிக்கு வாங்கவும் நாணயத்துடன் அதைக் குறித்த காலத்தில் செலுத்தவுங் கூடும்.

வியாபாரத்தில் பொருள்களை நல்லவையாகவும், மலிவாகவும் வாங்கவும், அவற்றை நல்ல விலைக்கு விற்கவும் ஏற்ற சாதனங்களை ஆராயவேண்டும். பண்டங்களை அவை விளையுமிடங்களுக்குச் சென்று நேரே விவசாயிகளிடத்திலோ, தொழிலாளரிடத்திலோ வாங்குவதால் நடுவில் தரகர்களுக்கு வீணில் கொடுக்கப்படும் பணம் மீதியாகிறது. அப்படியே வாங்கிச் சேர்த்த பண்டங்களைக் கூடிய வரையில் அவை விலையாகுமிடங்களுக்கு நேரிற் கொண்டு சென்று விற்பதால் நல்ல ஊதியங் கிடைக்கும். இதனால் அநாவசியமாக சில்லரை தரகு வியாபாரிகளுக்கு இடையில் பொருள் கொடுக்கவேண்டிய அவசியமிராது. இது போன்ற வேலைகளைச் செய்வதற்கு ஒரு வர்த்தக ஸ்தாபனத்திற்குப் பலபேர் உழைப்பாளிகள் வேண்டும். அவர்களும் பொறுப்புடையவர்களாகவும், வியாபார வளர்ச்சியில் நாட்டமுடையவர்களாயுமிருத்தல் வேண்டும். சம்பளத்திற்கு அமர்த்தப்படும் ஆட்களால் இவ்வேலைகள் சரிவர நடைபெற மாட்டா. கூட்டுறவு வியாபார ஸ்தாபனத்திலோவென்றால் அதன் பங்காளிகள் பலரிருப்பதால் பல வேலைகளையும் அவர்களைக்கொண்டு நிர்வகிக்கலாம். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவ் வியாபாரத்தில் பொறுப்பும், நாட்டமும், அக்கறையும், ஆவலும் மேற்பட்டிருக்கின்றன. ஆகையால், அவர்களால் செய்யப்படும் ஒவ்வொரு வேலையும் பொறுப்பு வாய்ந்ததாய், பொது ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்குத் துணை புரிவதாகிறது. வியாபாரத்தில் சரக்குகளை உலகில் விளம்பரப் படுத்துவதும் மிக முக்கியமாகும். அதிலும் பல அரிய முறைகளைத் தழுவ வேண்டும். விளம்பரத்திற்கென முதலில் பெரும் பணம் செலவிட வேண்டிவரும். கூட்டுறவு ஸ்தாபனத்தால் அதை விரிவாகச் செய்யக்கூடும். இதுவரை கூறிய விபரங்களால் கூட்டுறவு வியாபார முறையில் இருக்கும் அநுகூலங்கள் இனிது புலப்படுகின்றன.

இதைக் கருதியே ஐரோப்பிய நாடுகளில் பெரும்பாலான வியாபார ஸ்தாபனங்கள் கூட்டுறவு முறையில் நடைபெற்று வருகின்றன. அமெரிக்காவில் ஆட்டு ரோமங்களைச் சேகரித்து அவ



ற்றைப் பதம் படுத்தி ஆடைகளாக்கி விற்பனை செய்யவும், பால் பண்ணைகளினின்றும் பால், வெண்ணெய் முதலியவற்றைச் சேகரித்து உணவுப் பொருள்களாக்கி அவற்றை விற்கவும், தோட்டங்களில் விளையும் பலவகைப் பழங்களையும் சேகரித்து சாஸ்திரிய முறைகளால் அவற்றை நாட்படக் கெட்டுப் போகாமலிருக்கும்படி பதம் படுத்தியும், அவற்றினின்றும் திரவச் சத்துகளைத் தயாரித்தும் ஆலை தூரங்களுக்கனுப்பி விற்பனை செய்யவும், மக்கள் உபயோக மற்றவையென எறிந்துவிடும் பழங்களின் தோல்கள், இலைகள், தண்டுகள், பூக்கள் முதலியவற்றினின்றும் பலவித ரசாயனப் பொருள்களையும், உப்புக்களையும், சாராய வகைகளையும் தயாரித்து விற்கவும், இன்னும் இது போன்ற பலவித தொழில்களுக்கும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இங்கிலாந்து, ஜர்மனி, பிரான்சு முதலிய நாடுகளில் எங்கே பார்த்தாலும் கூட்டுறவு ஸ்தாபனங்களே காணப்படுகின்றன. நார்வே, ஸ்வீடன், ஸ்விட்ஜர்லாந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான் முதலிய நாடுகளில் ஏழை விவசாயிகளிடையிலும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் தோன்றி வேலை செய்கின்றன. இக்கூட்டுறவு முறையைத் தழுவியே உலகில் ஐக்கிய நாணயச் சங்கக் கிளர்ச்சியும் காணப்பட்டிருக்கிறது. கூட்டுறவு இயக்கம் எங்கே மலிந்து பரவுகிறதோ அங்கே ஒற்றுமையும், பொது நலத்தில் ஊக்கமும், சகிப்புத் தன்மையும், பரோபகார சிந்தனையும், தேசாபிமானமும் வளர்ந்தோங்குவது நிச்சயம். நிற்க, சாதாரணமாக நமது நாட்டில் கம்பெனியென்றால் ஒரு வியாபார ஸ்தாபனமென்று பலரும் பொருள் கொள்ளுவர். கம்பெனியென்றால் பலர்கூடிய ஸ்தாபனம் அல்லது சங்கம் என்பதே பொருள். ஐரோப்பிய நாடுகளில் எங்கே பார்த்தாலும் கம்பெனிகள் என்ற பெயரால் பல வியாபார ஸ்தாபனங்கள் காணப்படுகின்றன. உண்மையில் பார்க்குமிடத்து அவை ஒவ்வொன்றும் பலபேர் கூடிய ஸ்தாபனங்களாகவே இருக்கின்றன. அவ்வித முறைகளை ஆங்கிலேயரைப்பார்த்தே நம்மிந்தியரும் கற்று நடக்கத் தலைப்[illegible]என்பது தவறாக மாட்டாது. ஆயினும் நம்மில் [illegible]

அவர்களிடத்துள்ள சில குறைகளை மட்டுங் கைப்பற்றுவதோடு, அவர்களைப்போல் தாமும் ஒழுங்காக நடப்பதாகப் போலி நடனஞ் செய்கின்றனர். நந்நாட்டில் எத்தனையோ வியாபாரக் கம்பெனிகள் பெயரளவில் காணப்படுகின்றன. அதிலும் சென்னையினின்றும் காட்லாக்குகளின் அளவில் புற்றீசல்களைப்போல் புறப்படும் கம்பெனிகளுக்குக் கணக்கு வழக்கில்லை. அவையனைத்தும் பெயரளவில் கம்பெனியேயொழிய அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனி மனிதனுடைய விலாசம் மாத்திரமேயாகும். நம்மில் பலராமன் என்பவர் ஒரு கடைவைத்தால் தமது கடைக்குப் "பலராமன் அண்டு கம்பெனி" என்று பெயரிடுகிறார். கம்பெனி என்பதற்கு இங்கு பொருளேயில்லை. இவ்விதம் விலாசம் வைத்துக் கொள்ளுவது குற்றமென்பதையும் நம்மவர் அறிவதில்லை. சிலர் அதுவும் ஒரு வியாபாரத் தந்திரமென்கின்றனர். வியாபாரம் செய்யும் முறையில் பொய்யும், புரட்டும், வஞ்சனையும், மோசமும் கலப்பதே வியாபாரத் தந்திர மென்பது இந்திய வியாபாரிகளிற் பெரும்பாலாரது கருத்தென எழுத நேர்ந்ததற்கு மன்னிப்பீர்களாக. வியாபாரத்தில் காலம், இடம், வசதி, சரக்கின் உபயோகம், அவசியம், விளைவு, தரம், விலை முதலியவற்றைக் கவனித்து அவற்றிற்கேற்ப உண்மையோடும், நாணயத்தோடும் வியாபாரத்தை நடத்தி லாபமடையும் திறமைக்கே வியாபாரத் தந்திரமென்று பெயர். இவ்வுண்மையை யறிந்தவர் நம்மில் மிக மிகச் சிலரே. இந்திய வியாபாரிகளிடத்தில் காணப்படும் குறைகள் பலப்பல. அவற்றை யனைத்துங் கூறப் புகுந்தால் ஒரு புத்தகமாக முடியும். நந்நாட்டில் கூட்டுப்பங்கு வியாபார ஸ்தானங்களிடத்தில் பொது ஜனங்கள் நம்பிக்கை வைப்பதுங் கிடையாது. அதற்குக் காரணம் அப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் சில நந்தேசத்தில் தோன்றி இரண்டொரு அயோக்கியர்களின் முயற்சியால் இடையில் முறிந்து போய் நஷ்ட மடைந்ததேயாகும். ஆகவே அத்தகைய ஸ்தாபனங்களை நிர்வகிக்க முன் வருபவர்கள் யோக்கியப் பொறுப்பேற்ற நல்ல உழைப்பாளிகளா யிருக்கவேண்டுவதவசியம். மேலும் பங்குக்காரர்கள் பலரும் தக்க யோக்கியர்களா யிருப்பவர்களைப் பார்



த்து, தங்கள் ஸ்தாபனத்தின் நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். அரசாங்கத்தாரும் இத்தகைய ஸ்தாபனங்களுக்கு அரண் செய்து வரவேண்டும்.

மேல்நாட்டு வியாபார முறைகளில் நம்மவர் அறிந்து கொள்ள வேண்டிய உண்மைகள் பல உண்டு. இங்கிலாந்து, ஜர்மனி, அமெரிக்கா முதலிய நாடுகளில் தக்க மேதாவிகளால் வியாபார வழி வகைகளைப்பற்றி ஆராய்ச்சியோடு பல புத்தகங்கள் எழுதி வெளியிடப் படுகின்றன. அந்நாட்டு வியாபார உலகம் அவற்றைப் படித்துப்பார்த்து மென் மேலும் நல்ல முறைகளைக் கைக்கொண்டு வேலைசெய்து மேன்மை யடைகின்றது. நமது நாட்டிலோவெனில் வியாபாரிக்குக் (கைத் தொழிலாளர், விவசாயிகள் முதலியோருக்கும்) கல்வி யவசியமில்லையென்று பெரும்பாலுங் கருதப்படுகிறது. நம்மில் கற்றுணர்ந்தவர்களோவெனில் தாம் வியாபாரம் செய்து ஜீவிப்பது (கைத் தொழில், விவசாயம் முதலிய செய்து ஜீவிப்பதும்) இழிவெனக் கருதுகின்றனர். இந்நிலையில் நந்நாடு இருந்து வருகிறது. கல்வி வாசனையில்லாத வர்த்தக முதலாளிகளிடம் கல்வி கற்ற அறிஞர்கள் சொற்ப சம்பளத்திற்குக் குமாஸ்தாக்களாக அமர்ந்து, அவ் வியாபாரத்தில் சிறிதும் ஊக்கமும், பொறுப்பும், அனுபவமும் இல்லாதவர்களாய்க் குபாஸ்தா வேலைகளை யாற்றிவரும் காட்சிகள் பலவற்றை நந்நாட்டிலல்லாது வேறெந்நாட்டில் காணமுடியும்?

இக்காலத்தில் ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமாயின் அந்நாடு கைத் தொழிலிலும், வியாபாரத்திலும் சிறப்படைய வேண்டும். இங்கிலாந்து, ஜர்மனி, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகள் உலகில் முதன்மை யடைந்திருப்பதற்கு அந்நாட்டின் கைத் தொழிலும், வியாபாரமும் செழித்தோங்கி யிருப்பதே காரணமாகும். ஆகவே, இந்தியாவின் முன்னேற்றத்தைக் கருதுபவர்கள் முதலில் இந்நாட்டுக் கைத் தொழில்களையும், வர்த்தகத்தையும் வளர்க்கப்பாடு படவேண்டும். வியாபாரத்திற்கும், கைத் தொழிலுக்கும் அடிப்படையானது விவசாயமாகும். ஆகை

யால், இம் முத்துறையிலும் நம்மவர் முன்னேறவேண்டும். அவை ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்த முடையன. கூட்டுறவு முறையானது வியாபாரத்திற்கேயன்றி விவசாயம், கைத்தொழில் என்ற இரு துறைகளுக்கும் அவசியமானதே. விவசாயிகள் பலர் கூட்டுறவு ஸ்தாபனம் ஒன்றைக்கண்டு, அதன் மூலமாக விதை முதலியவைகளை வாங்கவும், தாம் விளைவிக்கும் பொருள்களைச் சேர்த்து வைக்கவும், பருவங்கண்டு அவற்றை விற்று முதலாக்கவும், அவசியம் நேர்ந்தபோது தமது சரக்கை ஈடாகக்காட்டி அதில் சொற்ப வட்டிக்குக் கடன் வாங்கவும், அனுகூலமான வகையில் அக்கடனைத் திருப்பிக் கொடுக்கவும் செய்து நன்மை யடையலாம். கைத்தொழிலாளர் பலர் ஒன்று சேர்ந்து கூட்டுறவு ஸ்தாபனம் ஒன்றைக்கண்டு அதன் மூலமாய்த் தங்கைத் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்களை மலிவாக வாங்கவும், அவற்றைப்பலவித செயற்கைப்பொருள்களாக மாற்றிச்சேர்த்து வைக்கவும், தக்கவிலைக்கு விற்கவும் செய்து நன்மையடையலாம். குறிப்பிட்ட சில சரக்குகளை விளைவிப்போர் அனைவரும் கூட்டுறவு வியாபார முறையிலீடுபட்டு, கட்டுப்பாடாகத் தஞ் சரக்குகளை ஒரு முகமாக விற்கத் தலைப்படுவார்களாயின், அவர்கள் கூறிய விலைக்கு உலகம் வாங்கியே தீர வேண்டு மன்றோ? ஒரு கூட்டுறவு வியாபார ஸ்தாபனம் பெரிதாக ஏற்பட்டு வேலை செய்யுமாயின், அதற்குக் கட்டுப்படாமல் ஒரு சிலர் தனியே போட்டியிட முற்பட்டபோதிலும் அவர்களுடைய போட்டியைச் சுலபத்தில் முறியடிக்கவும், அவர்களை வியாபார உலகில் கீழ்மைப்படுத்தவும் அந்த ஸ்தாபனத்தால் கூடும்.

செல்வத்திற் செழித்த மேல் நாடுகளில் ஒவ்வொருவரே பெருத்த முதல் வைத்து வாணிபஞ் செய்யும் ஆற்றலுடையவராயிருந்தும், பலபேர் கூடி கூட்டுறவு ஸ்தாபனங்களைக்கண்டு அவற்றின் மூலமாக வாணிபஞ் செய்கின்றனர். ஏழ்மையிற் சிறந்த நந்நாட்டில் ஏழை மக்களாகிய நஞ்சகோதரர்கள்-சிறிய கைமுதலைக் கொண்டு தொழிலை நடத்தப் புகுவார்கள்-எவ்வளவு தூரம் கூட்



டுறவு ஸ்தாபனங்களைக் காணவேண்டுவதவசிய மென்பதை யாவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால் கூட்டுறவு வியாபாரத்தின் பயனும், அவசியமும் நன்கு விளங்குவதால், ஏல விவசாயிகளுக்கு இம்முறை எம்மட்டும் பயன்படக் கூடுமென்பதை ஒரு சிறிது ஆராய்வாம். இரண்டொரு ஆண்டுகளுக்கு முன் வரையில் ஏல விவசாயிகள் தனித் தனியே ஒவ்வொருவரும் வேளாண்மை செய்து தாம் விளைவிக்கும் ஏலம் முதலிய வாசனைப் பொருள்களை தத்தம் இஷ்டம்போல் மொத்தமாகவோ, சில்லரையாகவோ வர்த்தகருக்கும், தரகருக்கும் விற்று வந்தார்களென்றும், அச்சமயத்தில் விற்பனையில் போட்டியேற்பட்டு விலை குறைந்து பலர் நஷ்ட மடைந்தார்களென்றும், விளைவில் சிறிது பாதக மேற்பட்டு விளைந்த சரக்குச் சிறிது மட்டமாக விருப்பின் அதற்குரியவர்கள் தக்க விலைக்கு விற்பதற்கின்றி விற்பனைப் போட்டியில் அவதியுற்றார்களென்றும், மற்றுஞ் சிலர் தமது சரக்கைத் தக்க விலை வரும் வரையில் சின்னாள் தாமதப்படுத்தி வைத்திருப்பதற்கேற்ற பண வசதியின்றி அப்போதைக்கப்போது குறைந்த விலைக்கே விற்றுக் கஷ்ட நஷ்டங்களை யடைந்து வந்தார்களென்றும், விற்பனையில் கட்டுப்பாடும் ஒற்றுமையும் இல்லாமையால் அயல் நாட்டு வியாபாரிகளுடையவும், இடையிலுள்ள தரகர்களுடையவும் தயவையும், விலை மதிப்பையுமே கதியென நம்பி எதிர்பார்த்திருந்தார்களென்றுங் கேள்விப்படுகிறோம். அவ்விதம் அடையும் பல கஷ்டங்களுக்கும் பரிகாரமாக அவர்களிடையில் ஒரு கூட்டுறவு ஸ்தாபனம் ஏற்பட்டிருக்குமாயின் எவ்வளவோ நன்மை யுண்டாகும். அக்கூட்டுறவு வியாபார ஸ்தாபனத்தின் மூலமாய் கட்டுப்பாடாகவும், லாபகரமாகவும், தங்கள் விவசாயத்தை நடத்தவும், தங்கள் விளை பொருள்களை ஒன்றாகச்சேர்த்து விலை கிராக்கியாயுள்ள சமயங்களைக்கண்டு ஒரு முகமாகத் தக்க விலைக்கு விற்கவும், சில்லரை வியாபாரிகளுக்கும், தரகர்களுக்கும் கண்ட விலைகளுக்கு

விற்காமல் பெரிய வியாபாரிகளுக்கே நேரில் உயர்ந்த விலைக்கு விற்பனை செய்யவும், சரக்குகளுக்கு அதிக கிராக்கியுள்ள ஊர்களைக் கண்டறிந்து, அவ்விடங்களுக்குச் சரக்கைத்தாமே நேரிற் கொண்டு சென்று விற்று லாபந்தேடவும், சரக்குகளை, உலகில் நன்கு விளம்பரப்படுத்தவும், தமது விவசாயத் தொழிலுக்கு அரசாங்கத்தாரிடமிருந்து வேண்டிய ஆக்கங்களைத் தேடவும், தங்கள் ஸ்தாபனத்தின் மூலமாக அங்கத்தினராகிய ஏழை விவசாயிகளுக்கு வேண்டிய கடன் தொகைகளைச் சொற்ப வட்டிக்குக் கொடுத்துதவவும், இன்னோன்ன பல காரியங்களையும் சாதித்தல் கூடும். இக்கடமைகளனைத்தையும் செய்யவே "திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம்" என்ற ஸ்தாபனம் ஏற்பட்டிருக்கிறதென அறியச் சந்தோஷ முண்டாகிறது. இத்தகைய ஸ்தாபனத்தில் ஏதோ சிலர் மாத்திரம் சேர்ந்திருந்தாற் போதாது; தென்னிந்தியாவில் ஏல விவசாயம் செய்பவரனைவரும் இதில் பங்காளிகளாகச் சேரவேண்டும். அப்பொழுதான் கட்டுப்பாடாக வேலை செய்து பயனடையமுடியும். வேண்டுமாயின் குறிப்பிட்ட ஒரு தலைமைச் சங்கத்தின் கீழ் கிளைச் சங்கங்களாக ஆங்காங்கிருந்து வேலை செய்யலாம். ஆகவே, ஏல விவசாயிகளனைவரும் கூட்டுறவு வியாபார முறையிலுள்ள நன்மைகளை யுணர்ந்து, திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்துழைத்து, கூட்டுறவு முறையில் நன்மையெய்த வேண்டுவதவசியமென்று இங்கே கூறி முடிக்கின்றோம்.

என். வேங்கட ரமணன்.



# ஏல விவசாயி.

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து
வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| மலர் 1 | உத்தமபாளையம். பிரபவ௵ மார்கழி௴<br>1927 டிசம்பர்௴ 1928 ஜனவரி௴ | இதழ் 9 |

திருவாங்கூர்

ஏல விவசாயிகளின்

## ஆருவது மகாநாடு,

போடிநாயக்கனூர்.

1927௵ அக்டோபர்௴ 7உ பிற்பகல் 3 மணிக்கு போடிநாயக்கனூர் ஜமீன்தார் மாக்ஷிமை வாய்ந்த மகா-ள-ள-ஸ்ரீ T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் மகா-ள-ள-ஸ்ரீ அ. சுப்பன் செட்டியார் அவர்கள் பங்கஜ விலாச ஹாலில் கூடிய ஆருவதாண்டு திறை விழாக் கொண்டாட்டத்தின் நிகழ்ச்சியும் தீர்மானங்களும்.

## முதல் நாள்.

1. மகா-ள-ள-ஸ்ரீ முத்துமணி அவர்களால் கடவுள் வாழ்த்து பாடப்பட்டது.

2. வடகரை ஜமீன்தார் மகா-ள-ள-ஸ்ரீ ராமபத்ர நாயுடவர்கள், மைசூர் திவானவர்கள், K. D. H. P. Co., ஜெனரல் மானேஜரவர்கள், அம்மயநாயக்கனூர் சின்ன ஜமீன்தார் திருவாளர். B. R. V. சாமி அவர்கள், S. I. R. இஞ்சினியரவர்கள் முதலிய கனவான்களாலனுப்பப்பட்ட அனுதாபக் கடிதங்களை வாசித்து ரிக்கார்டு செய்யப்பட்டது.

3. கனம் தங்கிய உபசரணைச் சபைத் தலைவரின் வரவேற்புப் பத்திரம் வாசிக்கலானது.

4. சங்கத்தாரால் மாக்ஷிமை வாய்ந்த பிரசிடெண்டவர்களுக்கு உபசாரப் பத்திரம் கனம் V. காமராஜ் அவர்களால் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

5 மாக்ஷிமை வாய்ந்த அக்கிராசனாதிபதி அவர்களின் முகவுரைப் பிரசங்கம் எழுதி வாசிக்கலானது.

6. காரியதரிசி அவர்களால் வருஷாந்திர ரிப்போர்டும், வரவு செலவு கோஷ்பாராவும், அடுத்த வருஷத்திய பட்ஜெட்டும் வாசித்து அங்கீகரிக்கப்பட்டது.

7. கம்பம் ஜனாப் பீர்முகம்மது பாவலரவர்களால் ஒற்றுமை என்னும் விஷயத்தைப்பற்றி வெகு விரிவாகவும், தெளிவாகவும் உபந்நியாசிக்கலானது.

8. மைசூர் எக்கனாமிக்கல் சூப்பிரண்டு திருவாளர். சூரிய நாராயணரவர்களால் மைசூர் வட்டகை ஏல விவசாயிகள் சங்கமேற்படுத்த உத்தேசித்திருக்கிற உத்தேசத்தைப்பற்றி உபந்நியாசிக்கலானது.

9. கோம்பை கன்னிகா பரமேஸ்வரி ஸ்கூல் மாணவர்களால் ஏல விவசாயிகளின் நிலைமையைப்பற்றி நடிக்கலானது.



10. மாக்ஷிமை வாய்ந்த அக்கிராசனாதிபதி அவர்களின் முடிவுரைப் பிரசங்கம் தெளிவாகவும், விரிவாகவும் உபந்நியாசிக்கலானது.

11. உபசரணைச்சபை காரியதரிசி அவர்களால் கூட்டத்துக்கு விஜயம் செய்திருந்த கனவான்களுக்கு மாலை சூட்டி வந்தனம் செலுத்தப்பட்டது.

12. மாலை 7 மணிக்கு சபை சம்பூர்ணமாயிற்று.

## இரண்டாம் நாள் (8—10—27) காலை.

### தீர்மானங்கள்.

1. மெம்பர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற பிரரேபணைகளை ஆலோசிக்கும் பொருட்டு விஷயாலோசனைக்கமிட்டி நியமிக்கவேண்டுமாய் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

2. ஒவ்வொரு கிளைச் சங்கங்களிலிருந்து 5 மெம்பர்கள் வீதம் அடியிற்கண்ட மெம்பர்களைத் தெரிந்தெடுத்துக் கொடுக்கலானது. ராஜாக்கள் ஏலக் கிருஷியர்களின் சங்கத்தையும், நாடார் க்ஷத்திரியர் ஏல விவசாயிகளின் அபிவிர்த்தி சங்கத்தையும் நமது சங்கத்தோடு இணைத்துக்கொள்ளும்படி 1926 ளு ஆகஸ்டு மீ 7 உயிலும், 1926 ளு டிசம்பர் மீ 18 உயிலும் நிர்வாகபாடி மீட்டிங்கில் தீர்மானித்திருக்கிற தீர்மானத்தை இக்கூட்டம் அங்கீகரிப்பதோடு ஷை சங்கங்களிலிருந்து விஷயாலோசனைக் கமிட்டிக்கு இரண்டு மெம்பர்கள் வீதம் தெரிந்தெடுத்துக்கொடுக்கும்படி தீர்மானிக்கப்பட்டது.

### விஷயாலோசனைக் கமிட்டி மெம்பர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர் | கா. கோ. தி. கோனேரி திருமலையப்ப பிள்ளை அவர்கள், கம்பம். | | |
| 2. | ,, | கா. கோ. தி. கோனேரி பிள்ளை | ,, | ,, |
| 3. | ,, | C. P. பெருமாள் கவுண்டர் | ,, | ,, |
| 4. | ,, | பொ. கடேப்மீசா ராவுத்தர் | ,, | ,, |
| 5. | ,, | கா. கரு. கிருஷ்ணசாமிக் கவுண்டர் | ,, | ,, |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | ,, | தி. ச. திருமலைசப்பு செட்டியார் | ,, | கோம்பை |
| 7. | ,, | தே. தொட்டண கவுண்டர் | ,, | ,, |
| 8. | ,, | N. சாமுவேல் னைட்டர் | ,, | ,, |
| 9. | ,, | T. B. கிருஷ்ணசாமிக் கவுண்டர் | ,, | ,, |
| 10. | ,, | S. பழனிச்சாமிக் கவுண்டர் | ,, | ,, |
| 11. | ,, | ஒ. வெ. ஒன்னூராமு செட்டியார் | ,, | தேவாரம். |
| 12. | ,, | R. நாராயணசாமி செட்டியார் | ,, | ,, |
| 13. | ,, | சி. ராமலிங்கம் செட்டியார் | ,, | ,, |
| 14. | ,, | செ. வெ. கிருஷ்ணமூர்த்தி செட்டியார் | ,, | ,, |
| 15. | ,, | N. M. காமாக்ஷி பிள்ளை | ,, | ,, |
| 16. | ,, | S. P. உசேன்கான் ராவுத்தர் | ,, | போடிநாயக்கனூர். |
| 17. | ,, | S. A. ரெங்கசாமி செட்டியார் | ,, | ,, |
| 18. | ,, | ம. அன்னதானப்பெருமான் செட்டியார் | ,, | ,, |
| 19. | ,, | V. புன்னைவனம் பிள்ளை | ,, | ,, |
| 20. | ,, | V. காமராஜ் | ,, | ,, |
| 21. | ,, | M. K. கிருஷ்ணமராஜா | ,, | ராஜாக்கள் சங்கம். |
| 22. | ,, | A. S. சஞ்சீவி ராஜா | ,, | ,, |
| 23. | ,, | R. குரைசை மாணிக்கம் நாடார் அவர்கள், | | க்ஷத்திரியர் சங்கம். |
| 24. | ,, | S. சங்கரநாராயண நாடார் அவர்கள் | | ,, |

கூட்டத்தை மாலை 3 மணிக்குத் தள்ளிவைக்கப்பட்டு சபையை சம்பூர்ணம் செய்யப்பட்டது.

---

## மாலை 6 மணிக்குக் கூடப்பட்டது.

---

1. நமது சங்கத்திலிருந்து திருவாங்கூர் ஸ்ரீமூலம் பிரஜா சபைக்கு ஒரு மெம்பர் ஸ்தானமும், சட்ட சபைக்கு ஒரு மெம்பர் ஸ்தானமும் கொடுக்க வேண்டுமென்று திருவாங்கூர் கவர்ன்மெண்டுக்குப் பலமுறை தீர்மானங்கள் மூலமாகவும், டெபுடேஷன் மூலமாகவும் கேட்டு வந்தும் இதுவரைக்கவனிக்காததைக்குறித்து இக்கூட்டம் விசனிக்கிறதோடு பிரதிநிதியை அனுப்பி கவர்ன்மெண்டாரிடம் குறைகளைச் சொல்லவேண்டுமாய்க் கோம்



பைக் கிளைச் சங்கம் பொதுக் கூட்டத்தாரால் தீர்மானித்த தீர்மானத்தைக் காரியதரிசியவர்களால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

2. யானை, புலி, கரடி முதலிய துஷ்டமிருகங்கள் வசிக்கக்கூடியதும், நெடுந்தூரமுள்ளதும், போக்கு வரவு வசதியில்லாததுமான தேவிகுளத்தில் சகல கோர்ட்டுகளும் இருப்பதால் பொது ஜனங்களுக்குப் பல கஷ்ட நஷ்டங்களும், இடையூறுகளும் ஏற்படுவதால் உடுமஞ்சோலை அல்லது பூப்பாறையில் ஒரு சப்ரிஜிஸ்தாராபீசும், ஒரு மாஜிஸ்திரேட் கோர்ட்டும் வைக்கவேண்டுமென்று கோம்பைக்கிளைச் சங்கம் பொதுக் கூட்டத்தாரால் தீர்மானித்த தீர்மானத்தைக் காரியதரிசியவர்களால் கொண்டு வரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

3. கனம் V. P. மாதவராவ் அவர்கள் 1080-ம் ஆண்டில் செய்த தீர்மானப்படி தேவாரம், கம்பம் மெட்டுகளில் வண்டிரோட்டு வசதிகளைச் சீக்கிரம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கோம்பைக் கிளைச்சங்கப் பொதுக்கூட்டத்தாரால் தீர்மானித்த தீர்மானத்தைக் காரியதரிசியவர்களால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

4. ஏலத்தோட்டங்களின்மேல் பாரஸ்டு, ரெவன்யூ என்னும் இரு டிபார்ட்டுமெண்டுகளின் மேற்பார்வையிலிருந்து விலக்கி ரெவின்யூ டிபார்ட்டுமெண்டினிடம் ஒப்புவிக்காதவரை சங்கடம் நிவர்த்தியாகமாட்டாது என்று கோம்பைக்கிளைச் சங்கம் பொதுக் கூட்டத்தாரால் தீர்மானித்த தீர்மானத்தைக் காரியதரிசியவர்களால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

5. தேவிகுளம், பீர்மேடு தாலுகா வாசிகள் பெரும்பாலும் மலையாளம் தெரியாத தமிழர்களாயிருப்பதால், செங்கோட்டை நாகர்கோவில் தாலுகாக்களைப்போல் பீர்மேடு, தேவிகுளம் தாலுகா சம்பந்தப்பட்ட விஷயங்களை (சர்க்கார் கெஜட்டுகளில்) தமிழில் பிரசுரிக்கவேண்டுமாய்க் கோம்பைக் கிளைச்சங்கம் பொதுக்கூட்டத்தாரால் தீர்மானித்த தீர்மானத்தைக் காரியதரிசியவர்களால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

6. ஏலமலை ரிசர்விற்குள் துஷ்ட மிருகங்களின் பயமும், திருடர்களின் பயமும் கூடுதலாகவிருப்பதால் ஏறக்குறைய எல்லா விவசாயிகளும் தங்கள் பந்தோபஸ்தின் பொருட்டு ஆயுதம் வைத்துக்கொள்ள தகுந்த முறையில் துப்பாக்கி சம்பந்தமான சட்டத்தை சீர்திருத்திக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதாக கோம்பைக் கிளைச் சங்கம் பொதுக் கூட்டத்தாரால் தீர்மானித்த தீர்மானத்தைக் காரியதரிசியவர்களால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

7. சென்னை சட்டசபையில் இச்சங்கங்களின் சார்பால் ஒரு பிரதிநிதிக்கு இடமளிக்கவேண்டுமாய்க் கோம்பைக்கிளைச் சங்கம் பொதுக் கூட்டத்தாரால் தீர்மானித்த தீர்மானத்தைக் காரியதரிசியவர்களால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

8. மதுரை ஜில்லா முக்கிய பிரதேசமாகிய போடிநாயக்கனூர், தேவாரம் மார்க்கமாய் வண்டி ரோட்டு திறந்து கொடுக்கவேண்டுமாய்க் டிஸ்டிரிக்ட் போர்ட்டாரவர்களையும், தாலுகா போர்ட்டாரவர்களையும், போடிநாயக்கனூர் ஜமீன்தாரவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறதென்று கோம்பைக்கிளைச் சங்கம் பொதுக்கூட்டத்தாரால் தீர்மானித்த தீர்மானத்தைக் காரியதரிசியவர்களால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

9. உசிலம்பட்டி தாலுகா போர்டை இரண்டாகப் பிரித்து உத்தமபாளையம் தாலுகாவிற்குத் தனிப்போர்டு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று கோம்பைக்கிளைச் சங்கம் பொதுக் கூட்டத்தாரால் தீர்மானித்த தீர்மானத்தைக் காரியதரிசியவர்களால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

10. திருவாங்கூர் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட மெட்டுகளில் நமது கூலிகளையும், பிரயாணிகளையும் பரிசோதனை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட எக்சைஸ் ஆபீசரவர்கள் பெண்களைப் பரிசோதனை செய்வதற்காக பெண்களாக இருக்கவேண்டுமென்றும் ஷை மெட்டுகளில் பிரயாணிகள் பரிசோதனைக்காக இவ்வளவு நேரம்வரை இருக்கவேண்டுமென்றும், இன்ன இன்ன சாமான்கள் தீர்வைப்பட்டவைகளென்றும், இவ்வளவுக்கு மேற்பட்ட சாமான்களுக்குத் தீர்வை செலுத்த வேண்டுமென்றும், ஷை விஷயங்களைக்கண்டு பகிரங்கமான விடத்தில் நமது பாஷையில் போர்டுபோட வேண்டுமென்றும் ஷை கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று கோம்பைக்கிளைச் சங்கம் பொதுக் கூட்டத்தாரால் தீர்மானித்த தீர்மானத்தைக் காரியதரிசியவர்களால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.



11. கோம்பையிலும், தேவாரத்திலும் தந்தி ஆபீசு, சேவிங்ஸ்பாங்கு, இன்சூரன்ஸ், V. P. பார்சல்கள் இஸ்யூ செய்தல் முதலியவைகளை நமது கிராமத்தில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமாய், போஸ்டல் அதிகாரிகளைக்கேட்டுக்கொள்ளவேண்டுமென்று கோம்பைக்கிளைச் சங்கம் பொதுக் கூட்டத்தாரால் தீர்மானித்த தீர்மானத்தைக் காரியதரிசியவர்களால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

12. இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் ரெயில் ரோட்டை போடியிலிருந்து தேவாரம், கோம்பை மார்க்கமாக ரோட்டைத் திறக்க வேண்டுமென்றும், கோம்பையில் ஒரு ஸ்டேஷனும், தேவாரத்தில் ஒரு ஸ்டேஷனும் ஏற்படுத்தவேண்டுமென்றும் S. I. R. கம்பெனியாரைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும் கோம்பைக் கிளைச் சங்கம் பொதுக் கூட்டத்தாரால் தீர்மானித்த தீர்மானத்தைக் காரியதரிசியவர்களால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

13. ஏல விவசாயிகளுக்காக தொண்டிமலை ரோட்டிலிருந்து மஞ்சக்குழி வழியாக கஜனப்பாறைவரை ரோடு அவசியமாய் வேண்டியதிருப்பதால் அதற்கு வருஷ சந்தாவாக ரூ 150 – திருவாங்கூர் கவர்ன்மெண்டாரவர்களைக் கேட்டுக்கொள்வதாக போடிநாயக்கனூர் கிளைச்சங்கம் பொதுக் கூட்டத்தாரால் தீர்மானித்த தீர்மானத்தைக் காரியதரிசியவர்களால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

14. நமது சங்கத்தில் இப்போதுள்ள பைலாவானது சந்தேக நிவர்த்திசெய்யக் கூடாததாகவிருப்பதால் ஒரு சப் கமிட்டி ஏற்படுத்தி பைலாவை சீர்திருத்தவேண்டுமாய் ஸ்ரீமான் T. B. கிருஷ்ணசாமிக் கவுண்டரவர்களால் பிரேரபித்து ஸ்ரீமான் மு. அ. முத்துவீரன் செட்டியாரவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

## பைலா திருத்தும் சப் கமிட்டி மெம்பர்கள்.

1. திருவாளர். S. V. சாமி அவர்கள், B. A., பாரட்லா.
2. ,, பகவதி சிக்கய்யா அவர்கள், B. A., B. L., வக்கீல்.
3. ,, தேவர் பொம்மையா அவர்கள், B. A., B. L., வக்கீல்.
4. ,, T. B. கிருஷ்ணசாமிக் கவுண்டரவர்கள்.
5. ,, C. P. பெருமாள் கவுண்டரவர்கள்.
6. ,, சி. ராமலிங்கம் செட்டியாரவர்கள்.

7. ,, S. பொன்னப்பன் செட்டியாரவர்கள்.
8. ,, ரூசை மாணிக்கம் உபாத்தியாயரவர்கள்.
9. ,, அழகர் ராஜா அவர்கள்.

இந்த ஒன்பதுபேர்களும் சப்கமிட்டிகூடி பைலாக்களைச் சீர்திருத்தம்செய்து பொதுச் சபைக்குக் கொண்டுவர வேண்டுமெயும், பைலா தயாரானவுடன் பொதுச் சபையைக் கூட்டவேண்டுமெயும், ஷெ கமிட்டியைத் தலைமைச் சங்கம் காரியதரிசி அவர்களே கூட்டிவைக்கவேண்டுமெயும் எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

15. நமது "ஏல விவசாயி" பத்திரிகைக்கு எல்லா அச்சு வசதிகளும் செய்து கொடுத்து இன்னும் மென்மேலும் அபிவிர்த்தி செய்யவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று ஜனாப் S.P. உசேன்கான் ராவுத்தரவர்களால் பிரேரேபித்து, ஸ்ரீமான் V. காமராஜ் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

நிறைவேறிய தீர்மானத்தின் விபரம்:—

இப்போது நமது சங்கத்தின் நன்மையைக்கோரி நடந்து வரும் "ஏல விவசாயி" பத்திரிகையை ஒப்புக்கொண்டு ஷெ பத்திரிகை மென்மேலும் நடந்தேறி வரவேண்டிய விஷயமாய் ஷெ பத்திரிகை நடத்திவருபவருடன் கலந்தாலோசித்து எப்படி நடத்துவதென்பதையும், எந்த விதத்தில் பணம் முதலியது உதவிசெய்து வரவேண்டுமென்பதையும், நிர்ணயிப்பதற்காக ஒவ்வொரு கிளைச் சங்கம் காரியதரிசியவர்களையும் கமிட்டி மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதால் ஷெ கமிட்டியார் பத்திரிகை நடந்து வருவதற்குத்தகுந்த முறையில் ஒரு திட்டம் தயாரித்து நிர்வாகக்கூட்டத்திற்கு அனுப்புகிற முடிவை நிர்வாக பாடியார் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமாய் எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

16. ஏல விவசாயிகளின் நன்மையைக்கோரி கோம்பையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக்கம்பெனி லிமிடெட்டில் நமது சங்கத்தின் ஆதரவிலுள்ள எல்லாக் கிளைச் சங்கங்களும், ஏல விவசாயிகளும் பங்குஎடுத்துக் கொள்ளவேண்டுமென்று ஸ்ரீமான் T. B. கிருஷ்ணசாமிக் கவுண்டரவர்களால் பிரேரேபித்து, ஜனாப் P. பீர் முகம்மது ராவுத்தரவர்களால் ஆமோதிக்கப்பட்டது.



நிறைவேறிய தீர்மானத்தின் விபரம்:—

இஷ்டப்பட்டவர்கள் பங்கு எடுத்துக்கொள்ளலாமென்று எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

17. திருவாங்கூர் கவர்ன்மெண்டாரவர்கள் வண்டமெட்டுப் பகுதியிலுள்ள ஏலத்தோட்டம் பட்டாதாரிகளுக்குக் குடியிருப்புக்குக்கொஞ்சங்கூட புல்மேடு பதித்துக் கொடுக்கப்படாதென்று தீர்மானம் செய்திருப்பதைக் கேட்டு வருத்தப்படுவதாகவும், இப்போது அனுபவித்துவருகிற அகில் குச்சுகளின் நிலங்களை ஜாரிசெய்தும் ஜாகா இல்லாதவர்களுக்கு 2 ஏக்கர் புல் மேடாவது பதித்துக் கொடுக்கவேண்டுமென்று திருவாங்கூர் கவர்ன்மெண்டாரவர்களைக் கேட்டுக்கொள்வதாக ஸ்ரீமான் C. V. முத்துச்சாமி அய்பரவர்களால் பிரேரேபித்து ஜனாப் பொ. நாகூர்மீரா ராவுத்தரவர்களால் ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

18. கம்பம் கிளைச் சங்கத்தின் விவசாயிகளுக்குக் கம்பத்திலிருந்து கம்ப மெட்டுவரை வெயில் காலங்களில் தண்ணீர் இல்லாமல் ரொம்ப கஷ்ட நஷ்டமடைந்து வருவதினாலும், இப்போது கம்பத்திலிருந்து கம்ப மெட்டு வரை வண்டி ரோட்டுப் போட கவர்ன்மெண்டாரிடம் உத்திரவுகிடைத்து வேலை நடந்துவருவதில் தண்ணீர் இல்லாமல் ரொம்ப கஷ்டமாயிருப்பதினாலும், மேற்படி பாதையில் நடக்கக்கூடியவர்களின் சௌகரியத்துக்காகவும், கம்பத்திலிருக்கப்பட்ட ஜனங்களுக்கும், ஆடு, மாடுகளின் சௌகரியத்துக்காகவும், கம்ப மெட்டுக்கு முன்னால் திருவாங்கூர் எல்லையிலிருக்கப்பட்ட குறவன் குளத்தைத் துருஸ்துசெய்து, கால்வாய் வெட்டி தண்ணீர் கொண்டு வந்து முன்னமே உபயோகப்படுத்தின குளமானது, உடைப்பு எடுத்து, வாய்க்காலில் தண்ணீர் வராமலிருக்கிற ஷெ குறவன்குளத்திலிருக்கப்பட்ட தண்ணீர் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குப் பாத்தியப்பட்டதாக பிரிட்டிஷ் எல்லை பினாணிலிருந்து வருவதினாலும், பாத்தியத்தைக் கவனித்து ஷெ குளத்தின் உடைப்பை அடைத்து, வெட்டி இருக்கப்பட்ட வாய்க்கால் வழியாகவாவது அல்லது ரோட்டுக்குப் பக்கத்திலாவது தண்ணீரைக் கொண்டுவந்து கொடுக்கவேண்டுமாய்த் தாலுகா & டிஸ்டிரிக்ட் போர்டுகளுக்கும், கலெக்டர் துரை அவர்களுக்கும், கவர்ன்மெண்டுக்கும் தெரிவித்து அதன்படி செய்து கொடுக்கவேணுமாய் ஜனாப் பொ. நாகூர் மீரா ராவுத்தரவர்களால் பிரேரேபித்து ஸ்ரீமான் நா. கோ. தி. கோனேரி பிள்ளை அவர்களால் ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

இரவு 9 மணிக்கு சம்பூரணமாகி மறுநாள் காலை 9 மணிக்குக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

---

## மூன்றாம் நாள் (9-10-27) காலை 9 மணி

---

19. போடிநாயக்கனூர், கம்பம், கோம்பை, தேவாரம் இந்த நான்கு இடங்களிலுமுள்ள ஏலக்காய் பாங்குகளுக்குப் பிரத்தியேகமாய் ஏலச் சரக்கு விற்பனை & ஸப்ளை ஸொஸைட்டி யூனியன் ஒன்று ஏற்படுத்தி மேற்படி யூனியன் ஆதீனத்தின் கீழ் ஏலச் சரக்கு விற்பனையை ஐக்கிய முறையில் நடத்திவர வேண்டுமென்று ஸ்ரீமான் B. K. ஒன்னூராம் அவர்களால் பிரரேபித்து, ஜனாப் A. M. காஜா ராவுத்தரவர்களால் ஆமோதித்ததில், சேல் என்பதை எடுத்துவிட்டு ஸுப்பர் வைஸிங் யூனியன் என்று திருத்தவேண்டுமெனவும் ஸ்ரீமான் S. பழனிச்சாமிக் கவுண்டரவர்களால் பிரரேபித்து ஸ்ரீமான் T. B. கிருஷ்ணசாமிக் கவுண்டரவர்களால் ஆமோதித்த திருத்தப் பிரரேபணை வாசிக்கப்பட்டது.

### நிறைவேறிய தீர்மானத்தின் விபரம்:—

போடிநாயக்கனூர், கம்பம் கோம்பை, தேவாரம் முதலியவிடங்களிலுள்ள நமது கோவாப்ரேட்டிவ் பாங்குகளின் கணிக்கைகளுக்காக ஒரு ஸுப்பர் வைஸிங் யூனியன் ஏற்படுத்தவேண்டுமெனவும் எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

20. திருவனந்தபுரத்தில் கவர்ன்மெண்டாருக்கு அடிக்கடி ஏல விவசாயிகளின் குறைகளை எடுத்துச்சொல்லி விவசாயிகளுக்குச்சௌகரியங்கள் ஏற்படுத்துவதற்கு ஏஜண்டு நியமனம் செய்யவேண்டுமென்று போடிநாயக்கனூர் கிளைச் சங்கத்தாரால் தீர்மானித்த தீர்மானத்தைக் காரியதரிசி அவர்களால் கொண்டுவரப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

21. நமது சங்கத்தில் இணைக்கப்பட்ட ஒவ்வொரு கிளைச் சங்கங்களிலும், தலைமைச் சங்கத்திலும் அப்போதைக்கப்போது தீர்மானிக்கப்படும் நிர்வாகப்பொதுக் கூட்டங்களின் தீர்மானங்களை நமது "ஏல விவசாயி"ப் பத்திரிகையில் பிரசுரம் செய்யப்படவேண்டுமென்றும், அதற்கு சாதகமாக ஏல விவசாயி ஆசிரியர் ஸ்ரீமான் R. நாராயணசாமி செட்டியாரவர்கள் நமது தலைமைச் சங்கம் நிர்வாக மெம்பராக இருக்கவேண்டுமென்று ஸ்ரீமான் N. M. காமாக்ஷி அவர்களால் பிரரேபித்து ஸ்ரீமான் K. ஹரிகோவிந்தம் பிள்ளையவர்களால் ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.



22. தேவாரத்தில் பிரிவுபட்ட சங்கங்களை எல்லாம் ஒன்றாக்க மாக்ஷிமை தங்கிய ஜமீன்தாரவர்களையும், கனம் போஷகரவர்களையும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறதென்று ஸ்ரீமான் R. நாராயணசாமி செட்டியாரவர்களால் பிரரேபித்து ஸ்ரீமான் K. ஹரிகோவிந்தம் பிள்ளை அவர்களால் ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

23. நமது சங்கத்துக்கு சாசுவத பிரஸிடெண்டவர்களாய் அமர்ந்து வருகிற மாக்ஷிமை தங்கிய ஜமீன்தார் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கரவர்கள் சாசுவத போஷகராகவும் இருந்துவரவேண்டுமெனவும் ஜனாப் S. P. உசேன்கான் ராவுத்தரவர்களால் பிரரேபிக்கப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

24. அடியிற்கண்ட மெம்பர்களை நிர்வாக மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

### போடிநாயக்கனூர் கிளைச் சங்கம்:—

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவாளர். | சின்ன ஜமீன்தார் வ. குலசேகர பாண்டிய நாயக்கர் | அவர்கள். |
| 2. | ,, | S. P. உசேன்கான் ராவுத்தர் | ,, |
| 3. | ,, | C. S. குருசாமி செட்டியார் | ,, |
| 4. | ,, | R. கந்தசாமி செட்டியார் | ,, |
| 5. | ,, | K. பண்டாரி செட்டியார் | ,, |
| 6. | ,, | A. M. காஜா ராவுத்தர் | ,, |
| 7. | ,, | S. பொன்னப்பன் செட்டியார் | ,, |
| 8. | ,, | சி.ரா. பழனிச்சாமி செட்டியார் | ,, |
| 9. | ,, | ம. திருமலைச்சாமி செட்டியார் | ,, |

### கோம்பைக் கிளைச்சங்கம்:—

| | | | |
|---|---|---|---|
| 10. | ,, | தே. தெண்டனக் கவுண்டர் | ,, |
| 11. | ,, | S. பழனிச்சாமிக் கவுண்டர் | ,, |
| 12. | ,, | B. S. பொன்னு செட்டியார் | ,, |
| 13. | ,, | T. B. கிருஷ்ணசாமிக் கவுண்டர் | ,, |
| 14. | ,, | தி. ர. திருமலை சுப்பு செட்டியார் | ,, |

15. ,, N. சாமுவேல் ரைட்டர் ,,
16. ,, ஜி. ம. சுப்பயக் கவுண்டர் ,,
17. ,, ஜி. பீர்மீரா சாயபு ராவுத்தர் ,,
18. ,, கா. பி. முகயதீன் மீரா ராவுத்தர் ,,

கம்பம் கிளைச் சங்கம்:—

19. ,, சி. அ. மூ. முகமது மக்தூம் ராவுத்தர் ,,
20. ,, க. கோ. தி. கோனேரி பிள்ளை ,,
21. ,, C. P. பெருமாள் கவுண்டர் ,,
22. ,, ஙா. கோ. தி. கோனேரி திருமலையப்ப பிள்ளை ,,
23. ,, பொ. காதர் மீரா ராவுத்தர் ,,
24. ,, கா. சு. கதிரய கவுண்டர் ,,
25. ,, ஙா. கா. கிருஷ்ணசாமிக் கவுண்டர் ,,
26. ,, C. V. முத்துச்சாமி அய்யர் ,,
27. ,, ம. சி. சுப்பயன் செட்டியார் ,,

தேவாரம் கிளைச் சங்கம்:—

28. ,, T. K. நாகையசாமி நாயக்கர் ,,
29. ,, M. ராமு பிள்ளை ,,
30. ,, சி. ராமலிங்கஞ்செட்டியார் ,,
31. ,, ஓ. வெ. ஒன்றுராமு செட்டியார் ,,
32. ,, ஓ. ரா. கொண்டு செட்டியார் ,,
33. ,, சி. சங்கரலிங்கம்பிள்ளை ,,
34. ,, வெ. பொ. சவிரிமுத்து நாடார் ,,
35. ,, அ. அருணாசலம் செட்டியார் ,,
36. ,, சி. சு. வீரபத்திரன் செட்டியார் ,,

ராஜாக்கள் ஏலக்கிருஷிகர்களின் சங்கம்:—

37. ,, T. A. K. அழகர் ராஜா ,,
38. ,, P. A. பங்காருசாமி ராஜா ,,
39. ,, P. N. ரெங்கசாமி ராஜா ,,



நாடார் க்ஷத்திரியக் ஏல விவசாயிகளின் அபிவிர்த்தி சங்கம்.—

40. ,, S. சங்கர நாராயண நாடார் ,,
41. ,, A. ஏஸ்தாஸ் நாடார் ,,
42. ,, H. புலமாட நாடார் ,,

மேலேகண்டவர்களில் திருவாளர். தி. ர. திருமலை சுப்பு செட்டியாரவர்களை வைஸ் பிரசிடெண்டாகவும், திருவாளர். S. பொன்னப்பன் செட்டியாரவர்களைக் காரியதரிசியாகவும், திருவாளர். A. M. காலே ராவுத்தரவர்களை உப காரியதரிசியாகவும் எல்லோராலும் ஏகோபித்துத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

25. „ஏல விவசாயி" பத்திரிகையைத்தமிழில் பிரசுரிப்பதோடு இங்கிலீஷிலும் பிரசுரிக்கவேண்டுமாய் மைசூர் கவர்ன்மெண்டு கைத்தொழில் அபிவிர்த்தி இலாக்கா டைரக்டர் திருவாளர். C. ரெங்கநாத ராவ் சாகிப் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு எல்லோராலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டது.

ஷை மைசூர் கைத்தொழில் அபிவிர்த்தி இலாக்கா டைரக்டரவர்கள் அன்போடும் உற்சாகத்தோடும் தமிழில்செய்த உபந்நியாசம் ரொம்பவும் போற்றக்கூடியதாயிருந்தது.

சபை அக்கிராசனாதிபதியவர்களுக்கும், மற்ற விசிட்டர்களுக்கும், ஸ்கவுட் முதலிய எல்லோருக்கும் சபையின் சார்பாக வந்தனம் கூறி சபை பகல் 12-மணிக்கு சம்பூரணமாக்கப்பட்டது.

(Sd.) T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர்,
அக்கிராசனாதிபதி.
9—10—27.

# ஒற்றுமை.

“70,000, 80,000 ஏக்கர் ஏலக் கிருஷி பூமிகளில் சுமார் 40, 50 லட்சம் ரூபாய் பெறுமான மகசூல்களை உண்டாக்கும் 2000-க்கு அதிகமான அங்கத்தினர்கள் சேர்ந்துள்ள திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கம்” என்று காந்திபபாறை ஏலத்தோட்டச் சொந்தக்காரரும், ஏல சரக்கு விற்பனைக் கம்பெனியின் மானேஜரும், ஏல விவசாயச் சங்கத்தைத் தாங்கி நிற்கும் பல பெரிய பலத்த தூண்கள் போன்ற முக்கியமானவர்களி லொருவருமாகிய கோம்பை ஜனாப் உ. மு. சே. முகைபதீன்பிள்ளை ராவுத்தரவர்கள் “ஏல விவசாயி”யின் பிரபவஹ மலர், 1 இதழ் 1-ல் எடுத்துக் காட்டியிருக்கிறதைக் கண்ட ஏல விவசாயி ஒவ்வொருவரும் எவ்வளவு பெருமையடைகிறாரென்பதை நான் சொல்லத் தேவையில்லை. அன்னியர்கள் அதைக்கண்டு எவ்வளவு தூரம் ஆச்சரியப்பட்டு பிரமிப்படைந்திருப்பார்களென்றும் சுட்டிக் காட்டுவது அவசியமில்லை. நாம் ஒரு சிறிய, பலத்த கூட்டக்காரராவோம். நம்மைப் போன்று யதேச்சையாய் பிறரின் ஒத்தாசை ஒரு சிறிதுமின்றி வெளிவந்து பிரகாசிக்கிற விவசாயச் சங்கங்கள் தமிழ் நாட்டில் அநேகமாக ரொம்பவும் குறைவென்றே கூறலாம். ஏன்! அநேகமாக பல வேறு துறையிலுள்ள அநேகர்க்கு நாமே முதன் முதல் வழிகாட்டியாக நிற்கப் போகிறோமென்று சொல்லவும் நான் தயங்கவில்லை.

கூட்டுறவு இந்திய விவசாயியின் உடன் பிறந்தது. அதின் ரகசியம் தெரியாத குடியானவன் ஒருவனுமில்லை. ஆயினும் இந்தியன் இன்றளவில் பலராலும் பல பக்கங்களிலிருந்து தூற்றப்படுகிறான். காரணமோ, மேனாட்டுப் பழக்க வழக்கங்கள், ஆசார



அனுஷ்டானங்கள், குடும்ப அமைப்புக்கள், புதிதாக எதிர்பாராத வண்ணமாய் அவனைச் சுற்றிலும் வந்து நெருங்கி வளைத்துக் கொண்டன. சுற்றுப்புறங்கள் அவனைத் திகைப்படையச் செய்துவிட்டன. கிராமத்திற்குப் பின்னால் பிறந்த நகரம் கிராமவாசியாகிய குடியானவனை பரிஷ்கரிக்கிறது. அவனைத் தலை நிமிர்ந்து நிற்க வொட்டாது. மேனாட்டு நாகரீகம கூர்மையான பிளவுபடுத்துகிற கத்தியைக் கொண்டு அதட்டிக் கொண்டு நிற்கிறது. இன்னது தான் செய்வதென்ற முடிவைக்காணாது குடியானவன் உன்மத்தனாய்த் தயங்கி நிற்கிறான். அந்தோ! கூட்டுறவு, இந்தியமண்ணில் பரத கண்டத்தில் ஆர்ய வர்த்தத்தில் முதன் முதல் விதைக்கப்பட்டு முளைத்துத் தளிர்த்துப் பூத்துக் காய் காய்த்தது என்று இப்பொழுது ஒருவன் தாராளமாகச் சொல்லப் பயப்படுகிறான். ஏன்? ஏக குடும்ப பராமரிப்பு இன்னும் எந்தக் கண்டத்தில் நிலையாய் நிலைத்து நிற்கிறது! 50, 60 பேர்களுக்குக் குறையாத இந்தியக் கிராம விவசாயக் குடும்பத்தைப்போல் எந்த மூலையில் இந்த இயந்திரக் காலத்தில் இன்னும் நிலவி நிற்கிறது! பதினைந்தாண்டு கழிவதற்கு முன்னர் ‘தான் வேறு குடும்பம் வேறு’ என்று சொல்லி வெளியே பிரத்யேகம் கிளம்பச்செய்கிற சுய நல நாகரீகம் இன்னும் இந்தியனை பலமாய் உருக்கமாய் பிடிக்கவில்லையென்பதைக் காண இந்துவின் மூலை முடுக்குகளிலுள்ள கிராமப்பட்டி தொட்டிகளினூடு சென்றுபாருங்கள். ஒற்றுமை எங்கே உலாவுகிறது? அதன் மணம் எங்கே பரிமளிக்கிறது? அங்கியே சென்று பாருங்கள் நகரங்களிலுள்ளவர்களே வந்து கண்டு களியுங்கள். அலைமேல் அலைமோத மேனாட்டுக் கடல் நீர் வந்து வந்து மோதிக் கொண்டு நிற்கிறது.

ஒற்றுமையை வேறுபடுத்தி நம்மைப் பிரித்தாள முடியாது. அதைப் புதிதாய் நாம் உண்டாக்கிப் போஷிக்கத் தேவையில்லை. சகோதரர்களே, பலதுளி பெருவெள்ளம். மழை சிறு சிறு துளியாக ஒன்றுடனொன்று சேராது தரையில் விழுகிறது. பாதையே செல்லும் வழிப்போக்கன் மேலில் பட்ட ஒரு துளி எம்மாத்திரம்? சில துளிகள் அவனை என்ன செய்யும்? அவன் துணிகளை நனைத்

து குளிரச்செய்யும். பின்னும் மழை பெய்கிறது. அவனும் போய்க் கொண்டிருக்கிறான். போகப் போக வழியில் கடக்க முடியாதபடி பல துளிகள் ஒன்று சேர்ந்த வெள்ளப் பிரவாகம் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கம் கரை புரண்டோடுகிறது. அதை அவனால் எதிர்க்கமுடியுமா? அவன் அப்பிரவாகத்தை எவ்வாறு கடந்துபோவான்?

சேர்க்கையின் பலம் அபாரம். அதை அளவிட்டு நிர்ணயிக்க முடியாது. மனிதனுடைய பிறப்பும், வளர்ப்பும் அழிவும் யாவும் ஒற்றுமையையே குறியாகக் கொண்டு நிற்கின்றன. வாழ்வும் முத்தியும் அதிலேயே பொதிந்து கிடக்கின்றன. ஏல விவசாயச் சீமான்களே! ஒன்று சேருங்கள், சாதிக்க முடியாததைக் கூட்டுறவினால் சாதித்துக் காட்டுங்கள். கையால் வீசித் தூர எறியக் கூடிய தனிச் செங்கல்லாய் பல இருக்கின்றன. சாந்தும் அவைகளுடன் கூட்டிப்பாருங்கள்; எவ்வளவு கம்பீரமான பெரிய பாலம் கட்டப்பட்டுக் கிடக்கிறது; எத்தனை பார வண்டிகள் அதன்மேலே ஊர்ந்து செல்கின்றன. பாலம் நிகரற்ற பரோபகாரமாய் தனித்து இயங்கி நிற்கிறது. அதே போல ஏலவிவசாயிகளின் கூட்டினால், சேர்க்கையால் பரோபகார மிகுந்த ஒரு பெரிய வாராவதியை நீங்கள் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். இடையே இடைஞ்சலேற்படுவது சகஜம். வெள்ளப் பிரவாகங்களாகிய இடையூறுகள் அன்று பூத்து அன்றழியும் காளானை நிகர்த்தன. நீங்கள் மலைக்காதீர்கள், பேதலியாதீர்கள். கட்டிடத்தை மட்டும் பலமாய் உரமாய்க் கெட்டித்துக் கட்டுங்கள். பாலத்தை அசைக்க முடியாது. நீங்கள் மட்டும் அதில் செல்லப் போகிறீர்களா? உங்களை அடுத்து எத்தனையோ பேர் அதின் மேல் கவலையற்று, பயமற்று நிர் விசாரமாய் நடக்கப் போகிறார்கள். உங்களுடைய பின் சந்ததியாரும் உங்களை மறவாது போற்றி வருவார்கள். கவனியுங்கள்! ஒற்றுமையைப் படியுங்கள்!!

S. வடிவேல்,
சூப்பிரண்டு, பொன்முடி எஸ்டேட்.

---



## திருவாங்கூர் மகாராணி

# சேது லட்சிமி பாய்.

மலையாளத்தார்க்குரிய தாய் வழி உரிமை, அதாவது, மருமக்கத்தாய உரிமை திருவாங்கூர் அரச குடும்பத்தார் விஷயத்திலும் வழங்கி வருகின்றது. காலஞ்சென்ற ஸ்ரீமூலம் திருநாள் மகாராஜா 1885-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சிம்மாசனம் வகித்தபோது மூன்று இளவரசர்கள்—அவருடைய சகோதரி புத்திரர்களாகிய (1) கேரள வர்மா (ரேவதி திருநாள்), (2) ராம வர்மா (சதயம் திருநாள்) (3) மார்த்தாண்ட வர்மா (அஸ்வதி திருநாள்)- இருந்தனர். ஆனால் அவர்கள் இளம் வயதிலேயே ஒருவர் பின்னாக ஒருவர் விண்ணுலக மடைந்த படியாலும், குடும்ப உரிமை வாய்ந்த பெண்மகள் ஒருவர் மில்லாத படியாலும், அரச குடும்பம் அற்று விடாதிருக்கும்படிக்கு, மாவேலிக்கரை அரசகுடும்பத்தைச் சேர்ந்த இரண்டு இளவரசிகள் 1900-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ந் தேதி யன்று சுவீகாரப் புத்திரிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். காலடைவில் அவ்விராஜ குமாரிகள் மூத்த அரசியாகவும், இளைய அரசியாகவும் ஏற்பட்டனர். அவர்களை மகாராஜா அதிக சிருஞ் சிறப்புடனும் வளர்த்து வந்தார். "கேரள காளிதாசர்" எனப் போற்றப்பட்டவரும், சமஸ்கிருத மொழியில் அதிக விற்பத்தி அடைந்தவரும், கவிஞருமாகிய காலஞ்சென்ற கேரள வர்மா இந்த இளவரசிகளுக்கு ஆசிரியராக ஏற்பட்டார். அவ்விருவர்க்கும் மலையாளம், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய இம்மூன்று மொழிகளும், சங்கீதம் முதலிய இதர கலைகளும் கற்பிக்கப்பட்டன. அவர்கள் சுயேச்சையாக வசித்து வந்தனர் அரச குமாரிகள் மங்கைப் பருவம் அடையவே அதிக சிறப்புடன் விவாகஞ்

செய்து வைக்கப்பட்டார்கள். மூத்த இளவரசி கேரள வர்மா வலிய கோயில் தம்புரானது உடன் பிறந்தாளின் புத்திரனுக்கும் இளைய இளவரசி பி. ஏ. பட்டாதாரியாகிய ரவி வர்மா கோயில் தம்புரானுக்கும் விவாகஞ் செய்து வைக்கப்பட்டனர். உலக வழக்கின்படி மூத்த அரசி, தமது தங்கைக்கு முன் ஒரு தாயாக விளங்குவாரென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் விதிவசம் வேறாக இருந்தது. இளைய அரசி 1912-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ந் தேதி யன்று ஓர் ஆண்மகவை ஈன்றனர். அவ்விளவரசர் இப்போது திருவாங்கூர் நாட்டிற்கு அரசனாக ஏற்பட்டுள்ளார். அவருக்குத் தக்க வயது ஏற்பட்டதும் அவர், பொறுப் பேற்றுத் தமது நாட்டை அரசு புரிவார். பட்டத்து இளவரசர் பிறந்தது முதல் ஜனங்கள் இளைய அரசியார் விஷயத்தில் சிந்தை செலுத்துவ தாயினர். பட்டத்து இளவரசர் பிறந்தபோது காலஞ்சென்ற மகாராஜாவுக்கு 53-வயது மட்டுமே யானதால், அவர் இளவரசருக்குத் தக்க வயது ஏற்பட்டு சிம்மாசனம் ஏறக்கூடிய காலம் வரையில் ஜீவந்தராய் இருப்பாரென எதிர்பார்க்கப்பட்டது. மகப்பேறில்லாத துக்கத்தாலும், ஆடம்பரங்களில் இயற்கையாயுள்ள வெறுப்பாலும் மூத்த அரசி பெரும்பாலும் தனியாகவே வசித்து வந்தார். நாட்டின் தலை நகருக்கு விஜயஞ் செய்த அதிக பிரக்யாதி பெற்ற வெளி நாட்டார்களும் மூத்த அரசியைப்பற்றி யாதொரு தகவலும் கேள்விப்படவில்லை; அவரைப் பார்க்கவில்லை. அவர் அதிக அரிதாகவே பிரயாணஞ் செய்திருக்கின்றார். சுருக்கிக் கூறின், அவ்வரசியைப் புறமே காண்பது அரிதினுமரிது. பெரும்பாலும் மௌனம் சாதிக்க இந்த அரசி, அவசியம் ஏற்பட்டாலன்றி தமது அரண்மனையை விட்டு வெளியே செல்வதில்லை யென்று தீர்மானஞ் செய்து கொண்டார் போலும். அவர், மேலான கருத்துகள் கொண்டு இம்மாதிரியாக தீர்மானஞ் செய்து கொண்டிருக்கலாம். அவர் பண்டைக் காலப் பெண்கள் வாழ்ந்ததுபோல வாழ விரும்பினார். "பண்டைக் காலத்திய முறைப்படி நான் வாழ வேண்டும்" என்பது அவர் கருத்தாகும். கொண்டானிற் சிறந்த கேளிர் பிறிதில்லை யென்பதில் முழு நம்பிக்கையுடன் இவ்வரசி



இள நங்கை, தனது உன்னத பதவியையும் மறந்து, தமது பதி காலா விட்டவற்றை, அன்று மின்றும், பதி பக்தியுடன் சிரசாவகித்து வருகின்றனர். இல்லறம் நடாத்தும் பெண்கட்கு இவ்வரசி ஓர் முன் மாதிரியாம். பாரியா கடமை செய்து முடிப்பதில் ராணி சேது லட்சுமி பாய்க்கு ஒப்பாரும் மிக்காரு மில்லையெனத் திடமாகக் கூறலாம். இவ்வரசியார் நோற்ற நோன்பின் பயனாக, கருப்பைக்குள் முட்டைக்கும், கல்லினுட் டேரைக்கும் அமுதளிக்கு மீசன் மனமிரங்கி புத்திர பாக்கியமளித்தான். 1923-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ம் நாள் மூத்த அரசி ஓர் பெண் மகவைப் பெற்று தனது மனோ வியாகூலத்தை அகற்றினார். முன்பின் 40-வருடங்கள் திறமையாக அரசு புரிந்தபின் மூலம் மகாராஜா 1924-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ந் தேதியன்று நாடு நீங்கினார். அவரது மரணத்தைப் பற்றி இன்னும் திருவாங்கூர் மக்கள் துக்கப்படுகின்றனர். பட்டத்து இளவரசருக்கு இன்னும் தக்க வயது ஏற்படாததினால் அவர் ஆட்சி புரிவதற்கில்லை. ஆதலால், திருவாங்கூர் அரசக் குடும்பத்தார்க்குரிய உரிமைப்படி நாட்டை அரசு புரிவதற்கு பாத்தியதை வாய்ந்துள்ள மூத்த அரசியார் இப்போது ஆட்சி புரிந்து வருகின்றார். பிரித்தானிய அரசாங்கத்தார், இளவரசர் பட்டத்திற்குரியவர் என்பதை அங்கீகரித்துக்கொண்டு, அவர் ஆட்சி புரிவதற்குக் காலம் ஏற்படும் வரையில் அவருக்குப் பதிலாக மூத்த அரசியார் ஆட்சி புரிவாரென்று 1924-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதியன்று ஓர் அறிக்கை வெளியிட்டனர். விதிவசத்தால் தாயரசி (Queen Mother) என்னும் உயர்ந்த பதவியை அடையாதிருந்தும், திருவருள் சம்மதமாக மறைவிலிருந்த இப்பெண்ணரசி வெளியே இழுக்கப்பட்டு, அரச வைபவங்களளிக்கப்பட்டு 45 இலட்சம் பிரஜைகளது சுகநலங்கட்குப் பாதுகாப்பாளியாக நியமிக்கப்பட்டார். இதுவும் விதிவசமன்றோ? ராணி சேது லட்சுமி பாய்க்கு முன் பெண்கள் திருவாங்கூரில் ஆட்சி புரிந்திருக்கின்றனர். அச்சி உமையம்மாள் 1677-ம் ஆண்டு முதல் 1634-ம் ஆண்டு வரையிலும், ராணி சேது லட்சுமி பாய் 1810-ம் வருடம் முதல் 1815-ம்

ட முற்பகுதி வரையிலும், அரசி பார்வதி பாய் 1815-ம் வருடம் பிற்பகுதி முதல் 1829-ம் வருடம் வரையிலும் திருவாங்கூரை ஆண்டு வந்திருக்கின்றனர். திருவாங்கூர் சரித்திரம் எழுதியவர், காலஞ்சென்ற அரசி லட்சுமி பாயைப் பற்றி எழுதியுள்ள பாகத்தில்,

"அரசி இளம் வயது வாய்ந்தவராக யிருந்தபோதிலும் (இந்த அரசி சிம்மாசனம் வகித்தபோது அவருக்கு வயது 20—பட்டுமே) அவர் மேலான கருத்துகள் கொண்டவராகவும், எவ்வாறு செய்யப்படுதல் நீதி என்றும் எவ்வாறு செய்யப்படுதல் அநீதி என்றும் தீர்மானிக்கக்கூடிய திறமை வாய்ந்தவராகவும், எவ்வெவ்விதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டால் தம் நாட்டுக் குடிகளுக்கு அநுகூலமாயிருக்கு மென்பதை யோசித்து அவ்விதமான ஏற்பாடுகள் செய்வதற்குரிய அறிவும் திறமையும் வாய்ந்தவராகவு மிருந்தார்."

என்று குறிப்பிட்டிருக்கின்றார். அத்தகையாரின் பிற் சந்ததியாராகிய சேது லட்சுமி பாய் ஆட்சி புரிவதற்குத் தகுதி வாய்ந்தவராயிருக்கின்றார். சிறந்த பழக்க வழக்கங்கள், தரும சிந்தனை, தெய்வ பக்தி முதலிய அரிய பெரிய குணங்கள், ராஜ விசுவாச முடைய பிரஜைகளை ஆள்வதற்கு அவ்வரசியைத் தகுந்தவராக்கின. பட்டவிழா நடந்த அன்று அப்பெண்மணி முதன் முறையாக நிகழ்த்திய சொற்பெருக்கானது ஓர் பேதைப் பெண்ணின் மனோபாவத்தை வெளிப்படையாக்கிக் காட்டிற்றே ஒழிய, வீர அரசி ஒருவளின் இறுமாப்பைக் காட்டவில்லை. அவ்வைபவத்தில் அவர் பேசியபோது,

"நான் செய்து முடிக்கவேண்டிய மாப்பெரும் கடமையைக் குறித்துச் சிந்திக்கும் வேளையில், துரிதமாக முன்னேற்ற மடைந்துவரும் நாட்டினரது கோரிக்கைப்படி தக்க ஏற்பாடுகள் செய்வதற்கு வேண்டிய திறமை எனக்கிருக்கோவென ஐயங் கொள்ளுகின்றேன். எனக்குரிய அலுவல்களைச் செம்மையாகச் செய்து முடிப்பதற்கு என்னுடைய அரசாங்க உத்தியோகஸ்தர்களும், குடிகளும் எனக்கு உதவி புரிவார்களென்று நான் பூரணமாக நம்புகின்றேன்."



என்று கூறினார். அதற்குப்பின் ஒரு மாதகாலம் வரையில் நாடு முழுவதிலும் குடிகள் அரசியைப்பற்றி அதிக மேன்மையாகப் புகழ்ந்து பேசிவந்தார்கள். ஆனால், தாம் கூறியபடி தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று அரசி எண்ணங் கொண்டவராயிருந்தபோதிலும், அவர் விஷயத்தில் தற்காலம் குடிகள் முன்னைப் போலில்லை. ஆட்சி செவ்வையாக நடைபெறுவதற்கு ஆளுபவர் தக்க திறமை வாய்ந்தவராயிருக்க வேண்டும். மகாராணியார் ஓர் சிறந்த பெண்மணி. அரச குடும்பத்தைச் சேர்ந்தவராயிருப்பதனால் தான், ஏனைய மானிடர்க்கு மேலான பிறவி என்னும் எண்ணம் சிறிதளவேனும் அவ்வரசியிடமில்லை. அரசியல் விவகாரங்கள் அவரது மனுஷத் தன்மையை அகற்றவுமில்லை. நாணம் பெண்ணுரு எடுத்ததே அரசி சேது லட்சுமி பாய். பாரியா கடமையில் இப்பெண் ஏனைய பெண்கட்கு ஓர் முன்மாதிரி. இவள் தெய்வந் தொழாள், கொழுநனையே தொழு தெழுபவள். இதுவே அவரது மதம்; வைராக்கியம்.

இவர் அரசியல் பொறுப்பெடுத்து மூன்றாண்டுகளாகின்றன. இக்காலத்துள் ஓர் பிறமதஸ்தரைக் (கிறிஸ்தவரை) தமது திவானாக (மந்திரியாக) நியமித்தது இவ்வரசியின் மனோதைரியத்தை மிகவும் வெளிப்படையாகக் காட்டுகின்றது. காலஞ்சென்ற அரசி லட்சுமி பாய் அரசு புரிந்த காலத்தில் திருவாங்கூர் நாட்டில் பிரிட்டானிய அரசாங்கத்தாரின் பிரதிநிதியாகயிருந்த ஆங்கிலேயர் திவானாகவு மிருந்தார். இந்த வகுப்பினரைச் சேர்ந்தவர் வேறு எவரும் இந்த நாட்டில் எக்காலத்திலும் திவானாக இருந்ததில்லை. அரசி ஓர் கிறிஸ்தவரைத் திவானாக நியமித்ததை குடிகள் ஆட்சேபித்தார்கள். அப்போது அரசி அக்குடிகளைச் சாந்தப்படுத்துவதற்காக தேவஸ்தானப் பகுதியைப் புதிய திவானின் அதிகாரத்திலிருந்து விலக்கி இந்து உத்தியோகஸ்தர் ஒருவர் வசத்தில் ஒப்புவித்தார். அவரது மனோதைரியம் பாராட்டத்தக்க தாயினும் திவானாக நியமிக்கப்பட்டவர் குடிகளைத் தச் [illegible]கப்பட்டவராயிருக்கவில்லை. திவான் மிஸ்டர் வாட்ஸ் அப்பதவிக்குத் தக்கவரல்லர். மிஸ்டர் வாட்ஸைத் தாக்கிய செல்வாக்குக் குறைவானது,

அரசமரத்தைப் பிடித்த பேய் பிள்ளையாரைப் பிடித்ததற்கொப்ப, எமது ஆருயிரன்ன அரசியையும் தாக்கியது மிகவும் விசனிக்கத்தக்கதே. இவரது செயல்களுள் எடுத்துக்கூற வேண்டியதாகவுள்ள இன்னொன்று, அநாதி ஆலயங்களில் பூர்வமாக நடந்து வந்த உயிர்ப் பலியை (ஆடு, கோழி முதலியவைகளை வெட்டுதலை) அறவே ஒழித்ததேயாம். இஃது ஓர் சிறந்த சீவகாருண்ணியச் செயல். இதிலிருந்து அவ்வரசி எத்துணை கருணையுடையவரென்பது வெள்ளிடை மலையாகின்றது. ராணி, குடிகளிடத்தில் பட்சமாயிருக்கிற படியால்தான், அக்குடிகள் அவரை ஏனைய அரசர்களுக்கு மேம்பட்டவராகக் கருதுகின்றனர். ராணிக்கு, நாட்டை ஆட்சி புரிவதற்குரிய அதிகாரம் வகித்துக்கொண்டிருக்க வேண்டுமென்னும் ஆசையில்லை; அவர் சாந்த குணம் வாய்ந்தவர்; எளிய முறை வாழ்வை விரும்புபவர்; கடவுளிடத்தில் பக்தி பூண்டவர். அவர் தமது நாட்டிலுள்ள பிரபல தேவாலயங்களுக்குச் சென்று ஆண்டவனை வணங்க உத்தேசித்திருக்கிறார். அவருக்கு 1927-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் தேதியுடன் 32-வது வயது பூர்த்தியாகின்றது. அவர் நீடூழி வாழவேண்டுமென்பது அவரது குடிகளின் பிரார்த்தனையாகும்.

அவரது தங்கை இளைய மகாராணியின் (தாயாதியின்) நற்குணங்களை வெளி நாட்டார்கூட அறிந்திருக்கின்றனர். அவர், சிறந்த அறிவு வாய்ந்தவராகவும் அரசியல் விவகாரங்களை நன்கு அறிந்தவராகவுமிருப்பதைப்பற்றி, அரசியல் விவகாரங்களில் ஈடுபட்டிருக்கும் பிரபல இந்தியர்கள் பலர் அவரை மேலாகப் பாராட்டியிருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர், நாட்டின் ஆட்சியை இந்த அம்மையார் வசத்தில் ஒப்புவித்து விடலாமென்று கூறியுள்ளார். இந்த அரசி, தமது புத்திரனாகிய மகாராஜா விஷயத்தில் அதிக சிரத்தை செலுத்துகின்றார். அரச குடும்பத்தாருக்குத் தீர்க்காயுளையும் மென்மேலும் சம்பத்தையும் அளிக்கும்படி எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

ப. பாகீரதி அம்மாள்,
ஆசிரியை, "மஹிளா" செங்கனூர்,
("தமிழ் மகள்" பத்திரிகையில் வெளிவந்தது)

---



# திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தின்

# ஒற்றுமை மகா நாடு,

## மதுரை.

### 24, 25, 26, 27உகள் நவம்பர்மீ 1927ஞு.

எந்த இயக்கத்திற்கும், எந்த ஸ்தாபனத்திற்கும் அல்லது எந்த தனி மனிதனுக்கும் எப்பொழுதும் ஒரே நின்ற நிலை நிலைக்காது, பல வேறு மாறுதல் ஏற்படுவது இயற்கையே. காட்டுத் தீ போன்று பரவிக் கொண்டிருந்த தேசீயக் கிளர்ச்சி இப்பொழுது எவ்வளவு மெதுவாய்ப் போயக் கொண்டிருக்கிறது! நத்தை மாதிரி மெதுவாய்ச் சென்று கொண்டிருந்த இயக்கங்கள் இப்பொழுது மின்சார வேகத்துடன் போவதை நாம் கண்டு ஆச்சர்யமடைகிறோம். ஒவ்வொன்றும் காலத்திற்குத் தக்கவாறு புதிய அமைப்பும், சீர்திருத்தங்களும் வேண்டுகிறது. உலகத்தின் மாறுபாட்டையும், காலச் சக்கிரத்தின் கடும் வேகத்தையும் ஊன்றிக் கவனித்த ஒருவர் மாற்றம் வேண்டுமென்பதை ஒருக்காலும் மறுக்கார். "புதியன புகுதலும் பழையன கழிதலும்" என்ற ஒப்பிலா தமிழ் மணிவாசகத்தைப் போற்றி, மதித்து, அனுசரித்து, எதிலும் ஏற்ற மாற்றத்தை ஏற்றுக் கொள்ளுவது ஒவ்வொருவருடைய கடமையாகும். சரியாய் நடைபெற்றுக் கொண்டுவந்த திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் சற்று ஆடியதால் அது தக்க மாற்றங்கள் வேண்டி நின்றது.

சுமார் கால் நூற்றாண்டுகளுக்கு முன் ஏல விவசாயிகள் அடைந்த கஷ்ட நஷ்டங்களைப் பற்றி ஏல விவசாயிகள் எண்ணிப்பார்த்தால், அவர்களுக்கு அவர்களுடைய பழைய வாழ்வின் பயங்கரத்

தோற்றம் தோன்றாமலிருக்காது. இப்பக்கங்களிலுள்ள எல்லா விவசாயிகளும் ஏல விவசாயிகளை ஏழை விவசாயிகளாகவே அவமதித்து ஏளனம் செய்த காலம் சுமார் 20 வருஷங்களுக்கு முன்புதான் மாறியதென்றாலும், எல்லோருடைய ஞாபகத்தை விட்டு இன்னும் அது அகலவே கிடையாதெனலாம். காலச் சக்கிரத்தின் வேகத்தால் திவான் கனம் V. P. மாதவராவ் அவர்கள் C. I. E மூலம் கீழேயிருந்து மேலே வர ஆரம்பித்தார்கள். ஏல விவசாயிகளுக்கு இக்காலத்திலிருந்து தான் நூதன சகாப்தம் (New Era) பிறந்ததென்று சொல்லலாம்.

இதற்குப்பின்பே இத்தாலுகா வாசிகள் இவர்களை ஒருவாறு மதிக்க ஆரம்பித்தார்கள்; இவர்களுள் கல்வி பரவ ஆரம்பித்தது; இப்பொழுது ஏல விவசாயிகளின் மக்களில் சிலர் அயலூர்களுக்குச் சென்று ஆங்கிலக் கல்வி கற்கத் தொடங்கினார்கள்; இவர்களுள் பொருளாதார நிலைமை வலுத்துச் செல்வாக்குப் பெருகத் தொடங்கினது. இச் செல்வச் சிறப்பான நிலை கொஞ்சகாலம் மட்டுமிருந்தது. திடீரென்று ஐரோப்பிய யுத்தம் தோன்றியதால் ஏலக்காயின் ஏற்றுமதிக் குறைவால் ஏலத்தின் விலை குறைய ஆரம்பித்ததுடன் ஏல விவசாயிகளின் ஸ்திதி அலங்கோலமாயிற்று. துன்ப வாழ்வு இவர்களைச் சிலகாலம் ஆட்டித்தான் விட்டது. துன்பத்தின் சக்தியே ஏல விவசாயிகளை ஏகமனதுடன் ஒன்றுபடும்படி செய்தது; மாட்சிமை வாய்ந்த T. V. K. காமராஜ பாண்டியாரவர்கள், மகா-ா-ா-ஸ்ரீ கனம் ராவ் சாகிப் அழகணன் செட்டியாரவர்கள் ஆகிய இரு கனவான்களுடைய அன்பான உயரிய ஆதரவை அடைய ஏற்பாடுகள் செய்யும்படி செய்தது; கடைசியில் தங்கள் நலத்திற்கென ஒரு சங்கம் ஸ்தாபிக்கும்படி செய்தது.

இந்தப் புதிய ஸ்தாபனத்தின் மூலம் ஏல விவசாயிகள் தங்களுள் என்றும் காணாத ஒற்றுமையைக் கண்டார்கள்; என்றும் அடையாத அளவற்ற நன்மைகளை அடைந்தார்கள்; அறியாத அநேக விஷயங்களை அறிந்தார்கள்; தீர்மானத்தின் அபார ஆற்றலை அனுபவத்தில் அறிந்து, ஆனந்தித்தார்கள். கம்பத்திலிருக்கும் ஏல விவசாயி ஒருவர் தேவாரத்திலிருக்கும் ஏல விவசாயி ஒருவரை நன்கு அறிந்துகொள்ள முன்பு வழியில்லாதிருந்தது. சங்க காலத்தில்தான் கூடலூர் முதல் போடி வரையுள்ள ஏல விவசாயிகள் அநேகமாய் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளத் தொடங்கவே அவர்களுள் பரஸ்பரம் தாண்டவமாட ஆரம்பித்தது. அறிவில், ஆற்றலில், அந்தஸ்தில், ஆஸ்தியில் ஏல விவசாயிகள் இப்பொழுது திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்தின் மூலம் தங்களை உயர்த்திக்கொண்டார்கள். இச்சங்கத்தின் மூலம் நமது பண்டைய பஞ்சாப முறை சிறுகச் சிறுகப் பரவ ஆரம்பித்தது. இந்தச் சங்கமில்லாவிடில் கம்பத்தில் பொதுநிதி இப்படி இவ்வளவு சேர்க்க முடியுமா? கம்பம் ஊரிலிருந்து மெட்டுவரைக்கும் (திருவாங்கூர் எல்லை) வண்டி ரோட்டு வெட்ட முடியுமா? ஏல விவசாயிகள் பாங்கு ஒன்றை ஏற்படுத்த இயலுமா? கோம்பை வாசிகள் T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனியைத் திறக்கவும், வடநாட்டில் நானு பக்கங்களில் விற்பனை ஏஜண்டுகளை ஏற்படுத்தவும் முடியுமா? கோம்பையில் பெரிய பள்ளிக்கூடம் ஒன்று ஸ்தாபிக்கவேண்டும் என்று எண்ண வருமா? அங்கு கோவில் கட்டவும், மருதி கட்டவும் முடியுமா? தேவாரத்தில் ரோட்டைக் காண முடியுமா? அங்கு ஆஸ்பத்திரியைத் தாலுகா போர்டிலிருந்து அழைக்க முடியுமா? தந்தி ஆபீஸ் ஒன்று ஏற்படுத்துமாறு வேலைகள் செய்ய இயலுமா? விவேகானந்த ஸ்கூல் ஸ்தாபிக்க முடியுமா? போடிநாயக்கனூரின் ஹைஸ்கூலுக்கு இவ்வளவு பணம் சேர்க்க முடியுமா? வருந்தி வருந்திப் பாத காணிக்கையிட்டு இங்கு அழைத்தாலும் வராத மைசூர் சமஸ்தானக் கைத்தொழில் இலாகாத் தலைவர் போடிக்கு வருவாரா? அநேகரைப் பொது விஷயங்களில் ஈடுபட்டு, உழைக்கும்படி இச்சங்கம் செய்திருக்கிறது. தி. ஏ. வி. சங்கத்தின் வழியாக ஏல விவசாயிகள் அடைந்த நன்மைகளை ஒவ்வொன்றாய் இங்கெழுதுவதென்றால், மிகவும் விரியும்.

முதலாவதாண்டு விழா தேவாரத்தில் நடைபெற்ற பொழுது, ஏல விவசாயிகள் மகா நாடு மிக்க விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. அவ் வைபவத்திற்கு வராத ஏல விவசாயத் தலைவர்கள் ஒருவருமேயில்லை யென்று கூறலாம். இந்த புதிய ஆவேச, ஆர்வ அதிர்ச்சியின் மூலமாகவே போடி, தேவாரம், கோம்பை, கம்பம் முதலிய கிளைச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒற்றுமையின் வலிமையை, நிர்மாணத்தின் ஆற்றலை, மகா நாட்டின் சிறப்பை, தொண்டின் அருமையை அறிந்த பிறகே, எதிலும் ஏல விவசாயிகள் உழைக்க முன்வரலானார்கள். ஏல விவசாயிகள் மகா நாட்டின் பிரதிநிதிகளின் கூட்டத்தையும், நடபடிக்கைகளையும் நடு நிலைமையில் நின்று கவனித்துப் பார்த்த ஒருவர் உண்மையுடன் அவர் தம் அபிப்பிராயம் சொல்லுவாரானால், ஏல விவசாயிகள் ஒற்றுமையிலும், அறிவிலும், ஆற்றலிலும் மகா வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தவிர்த்து வேறொன்றையும் சொல்ல முன்வர மாட்டாரென்றே திட்டமாய்ச் சொல்லலாம். தலைமைச் சங்கம், கிளைச் சங்கங்கள் ஆகிய இவைகளின் பொதுக் கூட்டங்களில் அல்லது நிர்வாகக் கூட்டங்களில் நடைபெறும் விவாதங்களும், முடிவுகளும் தீர்மானங்களும் தாலுகா, ஜில்லா போர்டுக் கூட்டங்களுக்கும், அல்லது அநேக மகாநாடுகளுக்கும் குறைந்தவைகளல்ல என்று நான் இச்சங்கம் ஜனித்த இரண்டாவது ஆண்டிலிருந்து இச்சங்கத்தாருடன் நெருங்கிப் பழகிக் கொண்டிருக்கும் அனுபவத்திலிருந்து இதைச் சொல்லுகிறேன். இக்கூட்டங்களில் அங்கத்தினர்கள் பேசுவது பெரிய ராஜ தந்திரிகள், வாக்கு வன்மை வாய்ந்த வாயாளர்கள் பேசுவது போன்றிருக்கும், சாதாரண விவசாயிகளுக்கு இம்மாதிரி பேசுவதை முதன் முறையில் கேட்பது ஆச்சரியமாகவும், ஆனந்தமாகவுமிருக்கும்.

எத்தனையோ சாதாரணப் படிப்பாளிகள், சாதாரண ஆஸ்திவான்கள், சாதாரண வருமானிகள், சாதாரண அறிவாளிகள், பல வழிகளில் மத்திய நிலை அடைந்த அநேகர்கள் சங்கத்தின் பலத்தால் மேலே வர ஆரம்பித்தார்கள்; செல்வாக்கு, கௌரவம், ஆற்றல் முதலியவைகள் அற்றவர்களில் அநேகர் தங்களின் சுய முயற்சியாலும், சங்கத்தின் சகாயத்தாலும் உயர்வடையத் தொடங்கினார்கள். சாதாரணப் பேச்சாளிகள் சாதுர்யப் பேச்சுக்காரர்களாக மாறினார்கள். சாதாரணமாக எழுதத்தெரிந்தவர்கள் அறிக்கைகள் தயாரிக்கவும், வியாசங்கள் எழுதவும் ஆற்றல் அடைந்தார்கள். இவர்கள் எல்லோரையும் சந்தோஷத்துடன் வரவேற்கிறேன்.



வியாபாரிகளின் போக்கை அனுசரித்துவந்த இவ் விவசாயிகள் அவர்களுடைய பிடியிலிருந்து விலகிக்கொண்டார்கள். வியாபாரிகள் இவர்களைப் பின்பற்ற ஆரம்பித்தார்கள். வியாபாரிகளும் தங்களுடைய நிலைமைப் உணர்ந்து கொண்டார்கள். ஏலக்காய் வியாபாரிகளுக்கும், ஏல விவசாயிகளுக்கும் மத்தியில் வேற்றுமையே வளர்ந்து வருகிறதன்றி, இரு வகுப்பினர்களுக்கும் ஏற்கெனவேயிருக்கும் சம்பந்தம் குறைந்துகொண்டு வருகிறதென்று தெரிவிக்காமலிருக்க முடியவில்லை. ஏல விவசாயிகளின் முன்னேற்றத்திற்கெல்லாம் காரணம் ஏல விவசாயிகளின் ஐக்கியமே ஒற்றுமை ஒற்றுமை யென்று அடிக்கடி பேசி, எழுதி அலுத்து விட்டபடியால், ஏல விவசாயிகளுக்கு எல்லா நன்மைகளும் கொடுத்தது ஒற்றுமை தானென்று ஒருவார்த்தையில் மறுபடியும் சொல்லிவிடுகிறேன்.

சந்தோஷத்துடன் சொல்லிக்கொண்டு வந்த விஷயத்தைச் சலிப்புடன் இப்பொழுது எழுத ஆரம்பிக்கிறேன். சென்ற ஆண்டிலிருந்து இச்சங்கம் சற்று ஆட ஆரம்பித்தது. இதற்குக் காரணத்தை எல்லா ஏல விவசாயிகள் மீதும் ஒருக்காலும் சுமத்தமாட்டேன். சில தலைவர்களுக்குள் ஏற்பட்ட வேற்றுமையாலும், ஆவேசத்தாலும், மனக்கசப்பாலும், சில்லறை மனஸ்தாபங்களாலும் சங்கத்தின் முற்போக்கின் வேகத்தைத் தடுத்து விட்டார்களென்று தங்கள் முன் தைரியமாகச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. 2,000 அங்கத்தினர்களுக்கு அதிகமாகக் கொண்ட சங்கம் மாலுமியற்ற மரக்கலம் போன்று ஏதோ சிலகால் சொற்ப காலம் தத்தளித்தது. சங்கதிகளை அறிந்த சிலர் தங்களுக்கு அவர்

களால் பல வழிகளில் இம்சை வந்தாலும் வருமென்றெண்ணி, மௌனமாயிருந்து தங்கள் கடமையைச் செய்யத் தவறி விட்டார்கள்.

பல அணுக்கள் சேர்ந்து ஒரு வஸ்து ஆவதுபோன்று, பல துளிகள் சேர்ந்து பெரு வெள்ளமாவது போன்று, அநேக அற்ப குற்றங்கள் சேர்ந்து ஒரு பெருங் குற்றமாகிவிட்டது. சங்கமானது எப்படியாகுமோ வென்று ஏல விவசாயிகள் திகைத்து, ஏங்கி, ஆவலுடன் சங்கத்தின் நல்ல எதிர்காலத்தை எதிர்நோக்கி நின்றார்கள். இவ்வாறு சங்கம் மங்கிவருவதைக் கண்ட ஏலவிவசாயிகள் தங்கள் பழைய காலத்தின் தோற்றத்தைக் கண்டு பயப்பட ஆரம்பித்தார்கள். சங்கத்திற்குத் தெய்வச் செயலால் இயற்கையாக ஏற்பட்டிருக்கும் பலத்தாலும், சரியான நிர்மாணத்தின் வன்மையாலும், பொது ஜனங்களின் மதிப்பாலும் திருவாங்கூர் ஏலவிவசாயிகள் சங்கம் எல்லா எதிர்ப்புகளையும் ஏற்றுத் தாங்கி, எத்தனையோ அபிப்பிராய பேதங்களுக்கெல்லாம் அசையாது நின்றுகொண்டிருந்தது போற்றத்தக்கதே.

சில கிளைச் சங்கங்களில் ஜாதி அபிமானம் தலை விரித்துத் தாண்டவமாடி கொக்கரித்துக் கூவ ஆரம்பித்தது. இதனால் சில அபிப்பிராயபேத அலைகள் கிளம்பி சலனித்துச் சலனித்து அடித்தன. சமூகக் கட்டுப்பாடு சில வழிகளுக்காக அவசியம் வேண்டியதுதான். அதை யார் மறுக்கிறார்கள்? ஜாதி அபிமானத்திற்கெல்லாம் இடமும், காலமும், அளவுமுண்டு. ஜாதியை எல்லா இடங்களிலும், எல்லா சமயங்களிலும் தூக்கிக்கொண்டு வரலாகாது. வருவதும் நியாயமன்று. வந்தாலும் விடப்பட மாட்டார்கள். இதற்காக வருந்தலாகாது. சமுத்திரம் போன்ற விஸ்தாரமான பொது ஜன முன்னேற்றம் என்பதன்முன் குளம் போன்றதொரு குறுகிய நோக்கமுள்ள மரபு அபிமானம் முன்னிற்குமோ? முன்னிற்கலாமா? விவசாயம் எல்லோருக்கும் பொதுவான தொழில். இதில் எல்லோருக்கும் பங்குண்டு என்பதை எவரும் எவ்விதத்திலும் மறுக்கார்.



இரகசியமாய், பின்பு பகிரங்க ரகசியமாய்க் கடைசியில் பகிரங்கமாய் சங்கத்தில் வேற்றுமைகளை எல்லா ஏல விவசாயிகளும் கண்டு கொண்டார்கள். பின்பு சங்கத்தின் சாஸ்வத அக்ராசனரும், போஷகரும், போடிநாயக்கனூர் ஜமீன்தாருமாகிய மாட்சிமை வாய்ந்த T. V. K. காமராஜ பாண்டியரவர்களிடம் முறையிட்டார்கள். அவர்களும் சங்கத்தில் பிளவைக் கண்டார்கள். சிலருடன் தீர்க்காலோசனை செய்து, ஒற்றுமை மகாநாடு ஒன்றைக் கூட்டுவதாகக் கடைசியில் தீர்மானித்தார்கள்.

மதுரையில் மேலமாசி வீதியிலிருக்கும் போடி அரண்மனை பங்களாவில் திருவாங்கூர் ஏல விவசாயிகள் ஒற்றுமையை முன்னிட்டு நவம்பர் மீ 24உ யன்று கூடவேண்டுமென அச்சிட்ட ஸ்ரீமுகங்கள் ஏல விவசாயிகளுக்கு அனுப்பினார்கள். மாட்சிமை வாய்ந்த T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கரவர்கள் மருந்து கொடுத்தேனும், சஸ்திரம் செய்தேனும் தி. ஏ வி. சங்கத்திற்குத் தற்சமயம் வந்திருக்கும் நோயைத் தீர்ப்பாரென்று நம்பியே ஏல விவசாயிகளில் அநேகர்கள் ஆவலுடன் அவரது ஆதீனத்தில் நடைபெறும் மகா நாட்டிற்குச் சென்றார்கள். பல விஷயங்கள் பகிரங்கத்திற்கு வந்தன. விஷயங்களை விளங்கினபின் விவசாயிகள் விசனித்தார்கள். இவ் விவாதம் ஒரு நாளில் சரியாகவில்லை; இரண்டு நாட்களில் தீர்ந்துவிடவில்லை; மூன்று நாட்களில் முடிந்துவிடவில்லை; நான்காம் நாளில்தான் விஷயங்களெல்லாம் சரிக்கு வந்து, இம் மகாநாடு இனிது முடிந்தது.

சங்கம் இனிமேல் எப்படியாகுமோ வென்று எண்ணி ஏக்கங்கொண்டிருந்தவர்கள் திகைக்கும்படியாக மகா கனம் தங்கிய அக்கிராசனாதிபதி அவர்கள் அவர் தம் பொறுமையினாலும், ராஜதந்திரத்தாலும், நடுநிலைமையாலும், இனிமையான பேச்சுக்களாலும், செல்வாக்காலும் சங்கத்தின் சர்வ ஆட்டங்களையும் அறிந்து, வேற்றுமைகளைக் களைந்து, அவைகளுக் கேற்றபடி வேண்டுவன செய்து சங்கத்தைச் சகலருக்கும் திருப்தியைக் கொடுக்கும்படியான நிலையில் வைத்து, எல்லா ஏல விவசாயிகளையும் சந்தோஷ

படுத்தினர்கள். இவர் இவ்வாறு இந்த இக்கட்டான காலத்தில் செய்த சரியான உதவிகளுக்காக ஏல விவசாயிகள் அவருக்கு வந்தனமளிக்க வேண்டுவதுடன் எல்லோரும் என்றுமே அவருக்கு நன்றி பாராட்ட மிகவும் கடமைப் பட்டிருக்கிறார்கள். சங்கத்தின் சரித்திரம் எழுதப்பெறும் காலத்து, அவரது திரு நாமம் பொன்னெழுத்துக்களால் எழுதப்படவேண்டும்.

இன்னும் ஏல விவசாயிகளுக்குப் பற்பல நன்மைகள் செய்யும் பொருட்டும், அவர்கள் மூலம் ஏல விவசாயிகள் அநேக நலங்கள் அடையும்பொருட்டும் மாட்சிமை வாய்ந்த T.V.K. காமராஜ பாண்டிய நாயக்கரவர்களுக்கு அநேக திடகாத்திரமும், நீண்ட ஆயுளும், ஊக்கமும், ஆக்கமும், சகல சம்பத்துக்களும் தந்தருளுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளைப் பிரார்த்திப்போமாக. இந்த ஒற்றுமை மகாநாட்டைக் கூட்டும் பொருட்டு பல ஊர்களுக்கும், பல பெரிய மனிதர்களிடத்திலும் பல முறை அடிக்கடி சென்று, மகா கனம் அக்ராசனாதிபதி அவர்களையும் கண்டு, கடைசியில் இந்த ஒற்றுமை மகாநாட்டைக் கூட்டுவதற்குத் தூண்டுகோலாயிருந்த கம்பம் ஸ்ரீமான் நா. கோ. தி. கோனேரி திருமலைப்பிள்ளை அவர்களுக்குச் சிறப்பாகவும், மற்றும் சமாதான மகாநாட்டிற்காக உழைத்த கனவான்களுக்குப் பொதுவாகவும் எல்லா ஏலவிவசாயிகளும் வந்தன மளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

புத்துயிரும், புத்துணர்ச்சியும் பெற்ற இச் சங்கம் ஓங்கி வளத்துடன் வளருமாறு இறைவன் இன்னருள் பாலிப்பாராக.

சங்கம் வாழ்க! வாழ்க!!

நா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

159610

திருவாங்கூர் ஏல விவசாயிகளுக்கு ஏற்றதுணைவன் எவன்?
ஏல விவசாயிகளுடைய நலம் நாடிச் சலியாது உழைப்பவன் எவன்?
ஏல விவசாயிகளின் நிலைமையை உள்ளபடி உரைப்பவன் எவன்?

அவனே "ஏல விவசாயி"

ஆகையால் அவனை ஆதரியுங்கள்

குறைந்த விகிதம்! நிறைந்த இலாபம்!!
நல்ல இடம்! நாணயமான கனவான்கள்!!

உங்களுக்கு
அதிக இலாபம் அடைய ஆசையா?
உங்கள்
வியாபாரத்தை விருத்தியாக்க விருப்பமா!
உங்கள் பெயரும் பொருளும் ஏல விவசாயிகள் வீடுகளிலெல்லாம் உலாவ இஷ்டமா?
பின் ஏன் தாமதக்கிறீர்கள் ??
உடனே "ஏல விவசாயி" யில்
விளம்பரம் செய்யுங்கள்.

விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு | ரூ. | 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, | ,, | 5—8—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 3—0—0 |

எப்பொழுதும் முன்பணம் அனுப்ப வேண்டும்.

நீண்ட காலம் விளம்பரம் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்,
"ஏல விவசாயி,"
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.